# இந்திய அரசு

## பட்ஜெட் 2023 - 24

## நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனின் உரை

## பிப்ரவரி 1, 2023

## உள்ளடக்கம்

### பகுதி -1


- அறிமுகம்
- 2024-லிருந்து சாதனைகள் : எவரும் பின்தங்கியிருக்காமல்
- அமிர்த காலத்திற்கான தொலைநோக்கு - அதிகாரம் அளிக்கப்பட்ட அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதாரம்
- இந்த பட்ஜெட்டில் முன்னுரிமைகள்
    i. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி
    ii. கடைக்கோடி மக்களையும் சென்றடைதல்
    iii. அடிப்படைக் கட்டமைப்பு மற்றும் முதலீடு
    iv. ஆற்றலை முழுமையாக பயன்படுத்துதல்
    v. பசுமை வளர்ச்சி
    vi. இளையோர் ஆற்றல்
    vii. நிதிப்பிரிவு

- நிதி நிர்வாகம்

---

## பகுதி -2

---

**மறைமுக வரிகள்**

- பசுமைப் போக்குவரத்து
- மின்னணுப் பொருட்கள்
- மின்சாரப் பொருட்கள்
- ரசாயனம் மற்றும் மருந்துப் பொருட்கள்
- கடல்சார் பொருட்கள்
- செயற்கை வைரங்கள்
- மதிப்புமிக்க உலோகங்கள்
- உலோகங்கள்
- கலவை ரப்பர்
- சிகரெட்டுகள்

**நேர்முக வரிகள்**

- எம்எஸ்எம்இ-க்கள் மற்றும் தொழில்முறையாளர்கள்
- கூட்டுறவு
- ஸ்டார்ட்அப்-கள்
- வேண்டுகோள்கள்
- வரிச்சலுகைகளின் சிறந்த இலக்குகள்
- தீவிரமாக செயல்படுத்துதல்
- மற்றவை
- தனிநபர் வருமானவரி

**இணைப்புகள்**

- 2023-24 பட்ஜெட் உரையின் பகுதி-2-க்கான இணைப்பு
    i. நேர்முக வரிகள் தொடர்பான திருத்தங்கள்
    ii. மறைமுக வரிகள் தொடர்பான திருத்தங்கள்

**பட்ஜெட் 2023 - 2024**
**நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனின் உரை**
**பிப்ரவரி 1, 2023**

மாண்புமிகு மக்களவைத் தலைவர் அவர்களே,

2023-24-ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டை நான் சமர்ப்பிக்கிறேன் இது அமிர்தகாலத்தின் முதலாவது பட்ஜெட்டாகும்.

## அறிமுகம்

1. முந்தைய பட்ஜெட்டில் இடப்பட்ட அடித்தளத்தின் மீது கட்டமைப்பதற்கான நம்பிக்கையாகவும், @100 இந்தியாவிற்கான திட்டவரைவை கொண்டதாகவும் இந்தப் பட்ஜெட் உள்ளது. வளமான அனைவரையும் உள்ளடக்கிய இந்தியாவை நாங்கள் எதிர்நோக்குகிறோம். இதில் வளர்ச்சியின் பயன்கள் அனைத்துப் பகுதிகளையும், அனைத்து குடிமக்களையும் குறிப்பாக நமது இளைஞர்கள், பெண்கள், விவசாயிகள், இதரப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஷெட்யூல்டு வகுப்பினர், ஷெட்யூல்டு பழங்குடியினர் சென்றடையும்.

2. நமது சுதந்திரத்தின் 75-வது ஆண்டில் இந்தியப் பொருளாதாரத்தை 'பிரகாசமான நட்சத்திரமாக' உலகம் அங்கீகரித்துள்ளது. நடப்பு ஆண்டில் நமது பொருளாதார வளர்ச்சி 7 சதவீதமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இது அனைத்துப் பெரிய பொருளாதாரங்களுக்கு இடையே மிகவும் உயர்வானது என்பது குறிப்பிடத்தக்கது. கொவிட்-19 மற்றும் போர் காரணமாக ஏற்பட்ட உலகளாவிய மாபெரும் மந்தநிலையையும் தாண்டியது. எனவே, சவால்களின் காலத்தையும் தாண்டி, ஒளிமயமான எதிர்காலத்தையும் நோக்கி இந்தியப் பொருளாதாரம் சரியான பாதையில் செல்கிறது.

3. இந்தியர்கள் இன்று தலை நிமிர்ந்து நிற்கின்றனர். இந்தியாவின் சாதனைகளையும், வெற்றிகளையும் உலகம் பாராட்டுகிறது.

இந்தியாவின் சுதந்திரத்திற்கு போராடிய முதியவர்கள், மகிழ்ச்சியோடு முன்னேறிச் செல்லும் நமது முயற்சிகளுக்காக ஆசீர்வதிப்பார்கள் என்பது உறுதி.

**பலவகை நெருக்கடிக்களுக்கு இடையேயான உறுதி**

4. விரிவான சீர்திருத்தங்கள் மற்றும் வலுவான கொள்கைகளில் நமது கவனமும், மக்கள் ஈடுபாட்டுடன் அனைவரின் முயற்சி மூலமான அமலாக்கமும், தேவைப்படுவோருக்கு உதவி செய்யும் இலக்கும், சிரமமான காலத்தில் சிறப்பாக செயல்பட நமக்கு உதவி செய்துள்ளன. பல்வேறு சாதனைகள் காரணமாக இந்தியாவின் மதிப்பு உலக அளவில் உயர்ந்துள்ளது: உலகத்தரத்தில் தனித்துவமான டிஜிட்டல் பொது கட்டமைப்பு அதாவது, ஆதார், கோ-வின், யுடிஐ; இணையில்லாத அளவு மற்றும் வேகத்தில் கொவிட் தடுப்பூசி; பருவநிலை தொடர்பான இலக்குகளில் சாதனை, இயற்கைக்கு உகந்த வாழ்க்கைமுறை (லைஃப்) இயக்கம், தேசிய ஹைட்ரஜன் இயக்கம் போன்ற முன்னிலைப் பகுதிகளில் தீவிரமான பங்களிப்பு.

5. கொவிட்-19 பெருந்தொற்று காலத்தில், 28 மாதங்களுக்கு 80 கோடிக்கும் அதிகமானவர்களுக்கு நிலையின்றி உணவு தானியங்கள் வழங்கும் திட்டத்தின் மூலம் எவரும் பசியுடன் உறங்கச் செல்லாததை நாங்கள் உறுதிப்படுத்தினோம். உணவு மற்றும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துவதற்கான எங்கள் உறுதியின் தொடர்ச்சியாக, பிரதமரின் ஏழைகள் நல உணவுத் திட்டத்தின் கீழ் அடுத்த ஓராண்டு காலத்திற்கு அனைத்து அந்த்யோதயா மற்றும் முன்னுரிமை குடும்பங்களுக்கு விலையின்றி உணவு தானியம் வழங்கும் திட்டத்தை 2023 ஜனவரி 1-லிருந்து நாங்கள் அமல்படுத்தி வருகிறோம். இதற்கு செலவாகும் ரூ.2 லட்சம் கோடியும் மத்திய அரசால் ஏற்கப்படுகிறது.

**ஜி-20 தலைமைத்துவம் : சவால்கள் மூலம் உலகளாவிய நிகழ்ச்சி நிரலை செயல்படுத்துதல்**

6. உலகளாவிய சாவல்களின் காலத்தில், உலக பொருளாதார ஒழுங்கில் இந்தியாவின் பங்களிப்பை வலுப்படுத்த தனித்துவமான வாய்ப்பை ஜி-20 தலைமைத்துவம் நமக்கு வழங்கியிருக்கிறது. 'வசுதைவ குடும்பகம்' என்ற மையப்பொருளுடன் உலகளாவிய சவால்களுக்கு தீர்வு காணவும் நீடிக்கவல்ல பொருளாதார வளர்ச்சியை உருவாக்கவும் ஆர்வமிக்க, மக்களை மையப்படுத்திய நிகழ்ச்சி நிரலை நாங்கள் செயல்படுத்துகிறோம்.

**2014-க்கு பிந்தைய சாதனைகள் : எவரும் பின்தங்கியிருக்காமல்**

7. 2014-க்கு பிந்தைய அரசின் முயற்சிகள் அனைத்து குடிமக்களுக்கும் சிறந்த தரமான வாழ்க்கையையும், கவுரமான வாழ்க்கையையும் உறுதி செய்துள்ளன. தனிநபர் வருமானம் இரட்டிப்பாகி, ரூ.1.97 லட்சத்திற்கு வந்துள்ளது.

8. கடந்த 9 ஆண்டுகளில் இந்திய பொருளாதாரத்தின் அளவு உலகின் 10-வது பெரிய பொருளாதாரம் என்பதிலிருந்து 5-வது பெரிய பொருளாதாரமாக உயர்ந்துள்ளது. வணிகம் செய்வதற்கு உகந்த சூழ்நிலையுடன் நன்கு நிர்வகிக்கப்படும் புத்தாக்க நாடாக நமது நிலை கணிசமான அளவுக்கு மேம்பட்டுள்ளது. உலகளாவிய பல குறியீடுகளில் இது பிரதிபலிக்கிறது. நீடிக்கவல்ல வளர்ச்சி இலக்குகள் பலவற்றில் நாங்கள் குறிப்பிடத்தக்க அளவு முன்னேறியிருக்கிறோம்.

9. இபிஎஃப்ஓ உறுப்பினர் சேர்ப்பு, இருமடங்காகி 27 கோடிக்கு சென்றிருப்பதும், 2022-ல் யுபிஐ மூலம், ரூ.126 லட்சம் கோடி அளவுக்கு 7,400 கோடி டிஜிட்டல் பரிவர்த்தனைகள் நடந்திருப்பதும், பொருளாதாரம் பெருமளவு முறைப்படுத்தப்பட்டிருப்பதை பிரதிபலிக்கிறது.

10. அனைவருக்குமான இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பயன்களுடன் பல திட்டங்கள் சிறப்பாக அமலாக்கப்பட்டதன் விளைவாக

அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. அந்த திட்டங்களில் சில வருமாறு:

i. தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ், 11.7 கோடி வீடுகளில் கழிப்பறைகள்
ii. உஜ்வாலா திட்டத்தின் கீழ் 9.6 கோடி சமையல் எரிவாயு இணைப்புகள்
iii. 102 கோடி பேருக்கு 220 கோடி கொவிட் தடுப்பூசி
iv. 47.8 கோடி அளவுக்கு பிரதமரின் ஜன் தன் வங்கிக் கணக்குகள்
v. பிரதமரின் சுரக்ஷா பீமா, பிரதமரின் ஜீவன் ஜோதி திட்டம் ஆகியவற்றின் கீழ், 44.6 கோடி பேருக்கு காப்பீடு
vi. பிரதமரின் விவசாயி கவுரவ நிதி திட்டத்தின் கீழ், 11.4 கோடி விவசாயிகளுக்கு ரூ.2.2 லட்சம் கோடி பணப்பரிவர்த்தனை

**அமிர்தகால தொலைநோக்கு - அதிகாரம் அளிக்கப்பட்ட மற்ற அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதாரம்**

11. வலுவான பொது நிதி மற்றும் வலுவான நிதித்துறையுடன் தொழில்நுட்பம் சார்ந்த, அறிவு அடிப்படையிலான பொருளாதாரம் உள்ளிட்டவை அமிர்தகாலத்திற்கான தமது தொலைநோக்குப் பார்வையாகும். இதனை அடைவதற்கு அனைவரும் இணைந்த அனைவரின் முயற்சியுடனான மக்கள் பங்கேற்பு அத்தியாவசியமானதாகும்.

12. இந்த தொலைநோக்குப் பார்வையை எட்டுவதற்கான பொருளாதார செயல்பாட்டிற்குரிய மூன்று விஷயங்கள் : முதலாவது, குடிமக்களுக்கு குறிப்பாக, இளைஞர்களின் விருப்பங்களை நிறைவேற்ற ஏராளமான வாய்ப்புகளை வழங்குதல்; இரண்டாவது, வளர்ச்சிக்கும், வேலை உருவாக்கத்திற்கும் வலுவான ஊக்கத்தை அளிப்பது. மூன்றாவது, கருப்பொருளாதார நிலைத்தன்மையை வலுப்படுத்துவது.

13. @100 இந்தியாவுக்கான நமது பயணத்தில் கவனம் செலுத்த வேண்டிய பகுதிகளாக, அமிர்காலத்தில் கீழ்க்காணும் 4 அம்சங்கள் மாற்றத்தை ஏற்படுத்தும் என்று நாங்கள் நம்புகிறோம்

1) மகளிரின் பொருளாதார அதிகாரம் : சுயஉதவிக் குழுக்களில் 81 லட்சம் ஊரகப் பெண்களை திரட்டியிருப்பதன் மூலம் தீன்தயாள் அந்த்யோதயா திட்டம் - தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றுள்ளது. மாபெரும் உற்பத்தியாளர் நிறுவனங்களை உருவாக்குவது அல்லது ஒவ்வொன்றும் பல ஆயிரம் உறுப்பினர்களுடன் கூட்டாகவும், தொழில்முறை ரீதியாக நிர்வகிக்கப்படுவதாகவும் இருப்பதன் மூலம் பொருளாதார அதிகாரம் அளித்தலின் இரண்டாவது கட்டத்தை அடைய இந்தக் குழுக்களை நாங்கள் பயன்படுத்தலாம். கச்சாப்பொருட்களை வழங்குவது, சிறந்த வடிவமைப்பு, தரம், அவர்களின் பொருட்களுக்கு குறியீடு செய்தல், சந்தைப்படுத்துதல் ஆகியவற்றின் மூலமும் அவர்களுக்கு உதவி செய்யப்படும். கொள்கைகளுக்கு ஆதரவு அளிப்பதன் மூலம் பெரும்பாலான நுகர்வோர் சந்தைகளுக்கு சேவை செய்வதற்கான அவர்களின் செயல்பாடுகளை அதிகரிக்கச் செய்ய முடியும். இதன் மூலம் பல ஸ்டார்ட்அப்-கள், யூனிகார்ன்களாக உயரும்.

2) பிரதமரின் விஸ்வகர்மா திறன் விருது (பிஎம் விகாஸ்): பல நூற்றாண்டுகளாக கருவிகளைப் பயன்படுத்தி தங்களின் கரங்களால் உழைக்கின்ற பாரம்பரிய கைவினை கலைஞர்கள், இந்தியாவிற்கு புகழ் சேர்த்திருக்கிறார்கள். இவர்கள் பொதுவாக விஸ்வகர்மா என குறிக்கப்படுகிறார்கள். இவர்களால் உருவாக்கப்பட்ட கலை மற்றும் கைவினைப்பொருட்கள் தற்சார்பு இந்தியாவின் உண்மையான உணர்வை பிரதிநிதித்துவம் செய்கின்றன. முதன் முறையாக இவர்களுக்கு உதவித் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய திட்டம் இவர்களது உற்பத்திப் பொருட்களின் தரத்தையும், அளவையும்,

சந்தையையும் மேம்படுத்த உதவுவதோடு எம்எஸ்எம்இ வழங்கல் தொடருடன் இவர்களை இணைக்கவும் செய்யும். இந்தத் திட்டத்தின் அம்சங்கள் நிதியுதவியை உள்ளடக்கி இருப்பது மட்டுமின்றி நவீன திறன்பயிற்சி, நவீன டிஜிட்டல் தொழில்நுட்ப அறிவு, பசுமை தொழில்நுட்பங்கள், வணிகச் சின்னத்தை பிரபலப்படுத்துவது, உள்ளூர் மற்றும் உலகளாவிய சந்தைகளுடன் இணைப்பு, டிஜிட்டல் பரிவர்த்தனைகள், சமூகபாதுகாப்பு, போன்றவற்றையும் கிடைக்கச் செய்வதாகும். இது ஷெட்யூல்டு வகுப்பினர், ஷெட்யூல்டு பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பெண்கள் மற்றும் நலிந்த பிரிவைச் சேர்ந்த மக்களுக்கு பெரிதும் உதவும்.

3) சுற்றுலா: உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் அம்சங்களை நாடு கொண்டுள்ளது. சுற்றுலாவில், கண்டறியப்பட வேண்டிய ஏராளமான அம்சங்கள் உள்ளன. இந்தத் துறை வேலைகள் மற்றும் தொழில் தொடங்குவதற்கு குறிப்பாக இளைஞர்களுக்கு பெருமளவு வாய்ப்புகளைக் கொண்டிருக்கிறது. சுற்றுலா மேம்பாடு, மாநிலங்களின் தீவிர பங்கேற்புடனும் அரசு திட்டங்கள் மற்றும் பொது - தனியார் துறை பங்களிப்புகளை இணைத்தும் இயக்கம் போல் செயல்படுத்தப்படும்.

4) பசுமை வளர்ச்சி : பசுமை எரிபொருள், பசுமை எரிசக்தி, பசுமை வேளாண்மை, பசுமைப் போக்குவரத்து. பசுமை கட்டடங்கள், பசுமை சாதனம் ஆகியவற்றுக்காகவும், பல்வேறு பொருளாதார பிரிவுகளில், பயனுள்ள முறையில், ஆற்றலைப் பயன்படுத்தும் கொள்கைகளுக்காகவும், பல திட்டங்களை நாங்கள் அமலாக்குகிறோம். இத்தகைய பசுமை வளர்ச்சி முயற்சிகள் பொருளாதாரத்தில் கரியமில வாயு தீவிரத்தைக் குறைப்பதற்கு உதவுகின்றன. பெரும் எண்ணிக்கையில், பசுமை வேலைவாய்ப்புகளை அளிக்கின்றன.

## இந்தப் பட்ஜெட்டின் முன்னுரிமைகள்

14. இந்த பட்ஜெட் கீழ்க்காணும் ஏழு முன்னுரிமைகளை முன்வைக்கின்றன. இவை பரஸ்பரம் உதவுகின்றவை. அமிர்தகாலம் முழுவதும் 'சப்தரிஷி' போல் நமக்கு வழிகாட்டியாக செயல்படும்.
    1) அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி
    2) தொலைதூரத்தையும் அடைதல்
    3) அடிப்படைக் கட்டமைப்பு மற்றும் முதலீடு
    4) ஆற்றலை முழுமையாக பயன்படுத்துதல்
    5) பசுமை வளர்ச்சி
    6) இளையோர் ஆற்றல்
    7) நிதிப்பிரிவு

**முன்னுரிமை 1** : அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி

15. அனைவரும் இணைவோம், அனைவரும் உயர்வோம் என்ற அரசின் தத்துவம் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை அளிக்கிறது. குறிப்பாக விவசாயிகள், பெண்கள், இளைஞர்கள், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஷெட்யூல்டு வகுப்பினர், பழங்குடியினர், மாற்றுத்திறனாளிகள், பொருளாதார ரீதியில் நலிந்த பிரிவினர், ஆகியோர் உட்படுத்தப்பட்டிருப்பர். உரிமை மறுக்கப்பட்டவர்களுக்கு ஒட்டுமொத்த முன்னுரிமை அளிக்கப்படும். ஜம்மு காஷ்மீர், லடாக், வடகிழக்கு பிராந்தியம் ஆகியவற்றுக்கு நீடித்த கவனம் செலுத்தப்படும். இந்த முயற்சிகளின் மீது, இந்த பட்ஜெட் கட்டமைக்கப்படுகிறது.

### வேளாண்மை மற்றும் கூட்டுறவு

### வேளாண்மைக்கான டிஜிட்டல் பொதுக் கட்டமைப்பு

16. வேளாண்மைக்கான டிஜிட்டல் பொதுக்கட்டமைப்பு என்பது திறந்த நிலை தரவாகும், திறந்த நிலை தரமாகவும் இணைந்து செயல்படும் பொது நலனாகவும் கட்டமைக்கப்படும். பயிர் திட்டமிடுதல், வேளாண் இடுபொருள்கள் கிடைப்பதை மேம்படுத்துதல், கடன்,

காப்பீடு, பயிர் மதிப்பீட்டிற்கான உதவி, சந்தை நுண்ணறிவு, வேளாண் தொழில்நுட்ப தொழில்துறை மற்றும் ஸ்டார்ட்அப்-கள் வளர்ச்சிக்கு உதவி ஆகியவை பற்றிய பொருத்தமான தகவல்கள் வழங்குவதன் மூலம், விவசாயிகளை மையப்படுத்திய தீர்வாக இது இருக்கும்.

**வேளாண் துரிதநிதி**

17. கிராமப்பகுதிகளில் இளம் தொழில்முனைவோர் மூலம் வேளாண் ஸ்டார்ட்அப்-களை ஊக்கப்படுத்துவதற்கு வேளாண் துரிதநிதி அமைக்கப்படும். விவசாயிகளால் எதிர்கொள்ளப்படும் சவால்களுக்கு புதிய, குறைந்த செலவிலான தீர்வுகளை ஏற்படுத்துவது இந்த நிதியின் நோக்கமாகும். வேளாண் நடைமுறைகளில் மாற்றத்திற்கான நவீன தொழில்நுட்பங்களை இது கொண்டுவருவதோடு உற்பத்தித் திறனையும் லாபத்தையும் அதிகரிக்கும்.

**பருத்தி உற்பத்தித் திறனை அதிகரித்தல்**

18. நீண்ட இழை பருத்தியின் உற்பத்தித் திறனை அதிகரிக்க பொது மற்றும் தனியார் துறை பங்களிப்பின் மூலம், தொகுப்பு அடிப்படையிலான மதிப்புத்தொடர் அணுகுமுறையை நாங்கள் பின்பற்றவிருக்கிறோம். இடுபொருள் விநியோகம், சேவைகள் விரிவாக்கம், சந்தை இணைப்புகள் ஆகியவற்றுக்கு விவசாயிகள், அரசு, தொழில்துறை இடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவது இதன் பொருளாகும்.

**தற்சார்பு தோட்டக்கலை தூய்மைத் தாவரத் திட்டம்**

19. ரூ.2,200 கோடி ஒதுக்கீட்டில் உயர்மதிப்பு தோட்டக்கலைப் பயிர்களுக்கான தரம் வாய்ந்த, நோயற்ற தாவரப் பொருள்கள் கிடைப்பதை அதிகப்படுத்த நாங்கள் தற்சார்பு தூய்மைத் தாவரத் திட்டத்தை தொடங்கவிருக்கிறோம்.

## சிறுதானியங்களுக்கான உலகளாவிய மையம்: 'ஸ்ரீ அன்னா'

20. "ஊட்டச்சத்தை, உணவுப் பாதுகாப்பை, விவசாயிகள் நலனை அதிகரிக்கின்ற சிறுதானியங்களை பிரபலப்படுத்துவதில் இந்தியா முன்னிணியில் இருக்கிறது" என்று மாண்புமிகு பிரதமர் கூறியுள்ளார்.

21. உலகில் 'ஸ்ரீ அன்னா'-வின் மிகப் பெரிய உற்பத்தியாளராகவும், இரண்டாவது பெரிய ஏற்றுமதியாளராகவும் நாம் இருக்கிறோம். கம்பு, கேழ்வரகு, சோளம், சாமை, தினை, வரகு போன்ற பலவகையான 'ஸ்ரீ அன்னா' பயிர்களை நாம் பயிரிடுகிறோம். இவை உடல்நல பயன்கள் பலவற்றைக் கொண்டுள்ளன. பல நூற்றாண்டுகளாக நமது உணவில் ஒருங்கிணைந்த பகுதிகளாக இருக்கின்றன. இந்த 'ஸ்ரீ அன்னா' தானியங்களை பயிரிடுவதன் மூலம் குடிமக்களின் ஆரோக்கியத்திற்கு சிறு விவசாயிகள் பங்களிப்பு செய்கிறார்கள் என்பதை நான் பெருமிதத்துடன் அங்கீகரிக்கிறேன்.

22. தற்போது 'ஸ்ரீ அன்னா'-வுக்கான உலகளாவிய மையமாக இந்தியாவை உருவாக்க ஐதராபாதில் உள்ள சிறுதானிய ஆராய்ச்சிக்கான இந்திய நிறுவனம் சர்வதேச அளவில், சிறந்த நடைமுறைகளை, ஆராய்ச்சியை, தொழில்நுட்பங்களை பகிர்ந்துகொள்வதற்கான ஆற்றல்சார் மையமாக்க உதவி செய்யப்படும்.

## வேளாண் கடன்

23. கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளம் மீதான கவனக்குவிப்புடன் வேளாண் கடன் இலக்கு ரூ.20 லட்சம் கோடியாக அதிகரிக்கப்படும்.

## மீன்வளம்

24. மீனவர்கள், மீன் விற்போர், குறு மற்றும் சிறு தொழில்களின் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கும், மதிப்புத் தொடர்

திறன்களை அதிகரிப்பதற்கும், சந்தை விரிவாக்கத்திற்கும், ரூ.6,000 கோடி முதலீட்டுடன் பிரதமரின் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் புதிய துணைத்திட்டத்தை நாங்கள் தொடங்கவிருக்கிறோம்.

**கூட்டுறவு**

25. விவசாயிகளுக்கு குறிப்பாக சிறு, குறு விவசாயிகளுக்கும் இதர விளிம்புநிலைப் பிரிவினருக்கும் கூட்டுறவு அடிப்படையிலான பொருளாதார மேம்பாட்டு மாதிரியை அரசு உருவாக்கியிருக்கிறது. ‘கூட்டுறவின் மூலம் வளம்’ என்ற தொலைநோக்குத் திட்டத்தை நிறைவேற்ற கூட்டுறவுக்கென புதிய அமைச்சகம் உருவாக்கப்பட்டது. இதனை நிறைவேற்ற ரூ.2,516 கோடி முதலீட்டில் 63,000 தொடக்க வேளாண் கடன் சங்கங்கள் கணினி மயமாக்கும் முன்முயற்சியை அரசு ஏற்கெனவே மேற்கொண்டுள்ளது. துறை சார்ந்தவர்கள், மாநிலங்கள் ஆகியவற்றுடன் ஆலோசித்து பன்னோக்கு தொடக்க வேளாண்மை கடன் சங்கங்களாக இவற்றை மாற்றும் நோக்குடன் மாதிரி அமைப்பு விதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. கூட்டுறவு சங்கங்களின் நாடு தழுவிய வரைபடத்திற்காக தேசிய கூட்டுறவு தரவுதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

26. இந்தப் பின்னணியில், பரவலாக்கப்பட்ட கையிருப்புத் திறனுக்கான திட்டத்தை நாங்கள் அமல்படுத்தவிருக்கிறோம். இது விவசாயிகள் தங்களின் உற்பத்திப் பொருளை சேகரித்து வைக்கவும், உரிய காலத்தில் விற்பனை செய்வதன் மூலம் கட்டுப்படியான விலையைப் பெறுவதற்கும் உதவும். இதற்காக கடந்த 5 ஆண்டுகளில், உட்படுத்தப்படாத பஞ்சாயத்துகள் மற்றும் கிராமங்களின் அதிக எண்ணிக்கையில், பன்னோக்கு கூட்டுறவு சங்கங்கள், தொடக்க மீன்வள சங்கங்கள், பால்வள கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றை அமைக்கவும் அரசு உதவி செய்யும்.

**சுகாதாரம், கல்வி மற்றும் திறனாக்கம்**

**செவிலியர் கல்லூரிகள்**

27. 2014-க்குப் பின் நிறுவப்பட்டு தற்போதுள்ள 157 மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்து 157 புதிய செவிலியர் கல்லூரிகள் அமைக்கப்பட உள்ளன.

## அரிவாள் வடிவ செல் உருவாக்கும் ரத்தசோகை ஒழிப்பு இயக்கம்

28. 2047-க்குள் அரிவாள் வடிவ செல் உருவாக்கும் ரத்தசோகை ஒழிப்பு இயக்கம் தொடங்கப்படும். இது விழிப்புணர்வை உருவாக்குவதோடு இதனால் பாதிக்கப்பட்டுள்ள பழங்குடியினர் பகுதிகளில் குழந்தை முதல் 40 வயது வரை உள்ள 7 கோடி பேருக்கும் நோய் கண்டறியும் பணி மேற்கொள்ளப்பட்டு மத்திய அமைச்சகங்கள் மற்றும் மாநில அரசுகளின் கூட்டு முயற்சிகள் மூலம் ஆலோசனை வழங்கப்படும்.

## மருத்துவ ஆராய்ச்சி

29. தெரிவு செய்யப்பட்ட ஐசிஎம்ஆர் பரிசோதனைக் கூடங்களின் வசதிகள், அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரி பேராசிரியர்கள், அதே போல், கூட்டான ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்பை ஊக்கப்படுத்துவதற்காக தனியார் துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் குழுக்கள் மேற்கொள்ளும் ஆராய்ச்சிக்கு வழங்கப்படும்.

## மருந்து கண்டுபிடிப்பு

30. ஆற்றல் சார் மையங்கள் மூலம் மருந்துகள் உற்பத்தித் துறையில் ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்பை ஊக்கப்படுத்துவதற்கு புதிய திட்டம் மேற்கொள்ளப்படும். குறிப்பிட்ட, முன்னுரிமைத் துறைகளில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில், முதலீடு செய்ய தொழில்துறையினரை நாங்கள் ஊக்கப்படுத்துவோம்.

## மருத்துவ உபகரணங்களுக்காக பல்துறை படிப்புகள்

31. எதிர்கால தேவைக்கான மருத்துவ தொழில்நுட்பங்கள் உயர்நிலை உற்பத்தி மற்றும் ஆராய்ச்சிக்கு திறன் மிக்க மனிதசக்தி கிடைப்பதை உறுதி செய்வதற்காக தற்போதுள்ள கல்வி நிறுவனங்களில் மருத்துவ உபகரணங்களுக்காக அர்ப்பணிக்கப்பட்ட பல்துறை வகுப்புகளுக்கு ஆதரவு அளிக்கப்படும்.

**ஆசிரியர் பயிற்சி**

32. புதிய பாடமுறை, பாடத்திட்ட பரிமாற்றம், தொடர்ச்சியான தொழில்முறை மேம்பாடு, கல்விசார் ஆய்வுகள், தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப அமலாக்கம் ஆகியவற்றின் மூலம், ஆசிரியர் பயிற்சி மறுசீரமைக்கப்படும். இந்த நோக்கத்திற்காக மாவட்ட கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்கள், துடிப்புமிக்க ஆற்றல்சார் நிறுவனங்களாக மேம்படுத்தப்படும்.

**சிறார்கள் மற்றும் இளையோருக்கான தேசிய டிஜிட்டல் நூலகம்**

33. பல்வேறு பிரதேசங்கள், மொழிகள், கலை, இலக்கியங்கள் மற்றும் நிலைகளுக்கு தரமான நூல்கள் கிடைக்கச் செய்வதற்காக சிறார்கள் மற்றும் இளையோருக்கு தேசிய டிஜிட்டல் நூலகம் உருவாக்கப்படும். இவர்களுக்கு பஞ்சாயத்து மற்றும் வார்டு அளவில், நூலகங்களை அமைக்க மாநிலங்கள் ஊக்குவிக்கப்படும். தேசிய டிஜிட்டல் நூலக தரவுகள் கிடைப்பதற்கான அடிப்படைக் கட்டமைப்பு அளிக்கப்படும்.

34. கூடுதலாக வாசிப்பு கலாச்சாரத்தை உருவாக்கவும், பெருந்தொற்றுக் காலத்தில், இழந்த கற்றலை ஈடுசெய்யவும், இந்த நூலகங்களுக்கு மாநில மொழிகள் மற்றும் ஆங்கிலத்தில் பாடத்திட்டத்தில் இல்லாத தலைப்புகளில், நூல்களை வழங்க தேசிய புத்தக மையம், சிறார்களுக்கான புத்தக மையம் மற்றும் இதர நிறுவனங்கள், ஊக்கப்படுத்தப்படும். இந்த முன்முயற்சியின் ஒரு பகுதியாக எழுத்தறிவில் தொண்டு நிறுவனங்களுடனான ஒத்துழைப்புப் பணியும் இருக்கும். இந்த நூலகங்களுக்கு வயதுக்கு

பொருத்தமான வாசிப்புப் பொருட்களை வழங்குவதற்கு நிதித்துறை முறைப்படுத்துவோர் மற்றும் அமைப்புகள் ஊக்குவிக்கப்படும்.

### முன்னுரிமை 2: கடைக்கோடி மக்களையும் சென்றடைதல்

35. பழங்குடியினர் நல அமைச்சகம், வடகிழக்கு பிராந்திய மேம்பாட்டுத்துறை ஆகியவற்றை பிரதமர் வாஜ்பாயின் அரசு உருவாக்கியது. கடைக்கோடி மனிதரையும் சென்றடைதல் என்ற நோக்கத்திற்கு கூர்மையான கவனத்தை அளிக்க எங்கள் அரசு, ஆயுஷ், மீன்வளம், கால்நடை பராமரிப்பு, பால்வளம், திறன் மேம்பாடு, ஜல்சக்தி, கூட்டுறவு ஆகியவற்றுக்கு அமைச்சகங்களை உருவாக்கியது.

### முன்னேற விரும்பும் மாவட்டங்கள் மற்றும் வட்டாரங்கள் திட்டம்

36. முன்னேற விரும்பும் மாவட்டங்கள் திட்டத்தின் வெற்றியை அடுத்து அண்மையில் முன்னேற விரும்பும் வட்டாரங்கள் திட்டத்தை அரசு தொடங்கியது. 500 வட்டாரங்களை உள்ளடக்கிய இந்த திட்டத்தில், சுகாதாரம், ஊட்டச்சத்து, கல்வி, வேளாண்மை, நீராதாரங்கள், அனைவரையும் உள்ளடக்கிய நிதிமுறை, திறன் மேம்பாடு, அடிப்படைக் கட்டமைப்பு போன்ற அத்தியாவசியமான அரசின் பல்துறை சேவைகள் பரவலாக்கப்படும்.

### பிரதமரின் பிவிடிஜி மேம்பாட்டு இயக்கம்

37. குறிப்பிட்டு பாதிக்கக் கூடிய பழங்குடி குழுக்களின் (பிவிடிஜி) சமூகப் பொருளாதார நிலைகளை மேம்படுத்த பிரதமரின் பிவிடிஜி மேம்பாட்டு இயக்கம் தொடங்கப்படும். இது பாதுகாப்பான வீட்டு வசதி தூய்மையான குடிநீர், துப்புரவு போன்ற அடிப்படை வசதிகள், பிவிடிஜி குடும்பங்கள் மற்றும் குடியிருப்புகளுக்கு முழுமையாக கிடைக்கச் செய்யும். கல்வி, சுகாதாரம், ஊட்டச்சத்து, சாலை மற்றும் தொலை தகவல் தொடர்பு, ஆகியவை எளிதாக கிடைப்பது மேம்படுத்தப்படும். வாழ்வாதார வாய்ப்புகள் நீடிக்கப்படும். அடுத்த

மூன்று ஆண்டுகளுக்கு இந்த இயக்கத்தை செயல்படுத்த ஷெட்யூல்டு பழங்குடியினருக்கான மேம்பாட்டு செயல்திட்டத்தின் கீழ், ரூ.15,000 கோடி, ஒதுக்கப்படும்.

## ஏக்லாவியா மாதிரி உறைவிடப் பள்ளிகள்

38. 3.15 லட்சம் பழங்குடி மாணவர்களுக்கு பயன்படுகின்ற 740 ஏக்லாவியா மாதிரி உறைவிடப் பள்ளிகளுக்கு அடுத்த மூன்று ஆண்டுகளில், 38,800 ஆசிரியர்களையும், உதவி செய்யும் ஊழியர்களையும் மத்திய அரசு பணி அமர்த்தும்.

## வறட்சி பாதித்த பகுதிகளுக்கான குடிநீர்

39. வறட்சியால் பாதிக்கப்பட்ட கர்நாடகாவின் மத்திய பகுதியில் நீடிக்கவல்ல குறு பாசன வசதிக்கும் குடிநீருக்கான நீர்த்தேக்க தொட்டிகளை நிரப்புவதற்குமான அப்பர் பத்ரா திட்டத்திற்கு ரூ.5,300 கோடி மத்திய நிதியுதவி வழங்கப்படும்.

## பிரதமர் வீட்டுவசதித் திட்டம்

40. பிரதமர் வீட்டுவசதித் திட்டத்திற்கு 66 சதவீத உயர்வுடன் ரூ.79,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## பாரத கல்வெட்டுக் களஞ்சியத்தை

41. பாரத கல்வெட்டுக் களஞ்சியத்தை உருவாக்குவதற்காக டிஜிட்டல் கல்வெட்டு அருங்காட்சியத்தில் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட 1 லட்சம் பழமை வாய்ந்த கல்வெட்டுகள் முதல் கட்டமாக இடம்பெறும்.

## *ஏழை சிறைக்கைதிகளுக்கு ஆதரவு*

*42.* தங்களுடைய அபராதம் மற்றும் பிணைக்கான தொகையை செலுத்த இயலாமல் ஏழ்மை நிலையில் உள்ள சிறைகைதிகளுக்கு பொருளாதார ரீதியில் உதவும் நிதி உதவி அளிக்கப்படும்.

## *முக்கியத்துவம் 3: உள்கட்டமைப்பு மற்றும் முதலீடு*

*43.* உள்கட்டமைப்பு மற்றும் உற்பத்தியில் அதிகளவில் முதலீடு செய்வது வளர்ச்சியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் வேலைவாய்ப்பையும் உருவாக்கும். இதனைக் கருத்தில் கொண்டு இந்த பட்ஜெட்டில் முதலீட்டை அதிகரித்து, வேலைவாய்ப்பை உருவாக்க மத்திய அரசு கவனம் செலுத்துகிறது.

### *வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்புகளுக்கு மூலதன முதலீடே அடித்தளம்*

44. தொடர்ந்து 3-வது ஆண்டாக மூலதன முதலீடு 33 சதவீதம் அதிகரித்து 10 லட்சம் கோடியாக உள்ளது. இந்த தொகை உள்நாட்டு மொத்த உற்பத்தியில் 3.3 சதவீதமாகும்.

45. கடந்த சில ஆண்டுகளாக முதலீடு தொடர்ந்து அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, வேலைவாய்ப்பை உருவாக்கவும், நாட்டின் வளர்ச்சியை ஊக்குவிக்கவும், தனியார் மூதலீட்டை ஊக்குவிக்கவும், மத்திய அரசு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது

### *பயனுள்ள மூலதனச் செலவு*

46. மத்திய அரசின் நேரடி மூலதன முதலீடு என்பதை மாநில அரசுகளுக்கு நிதியுதவி அளிப்பதற்கான வாய்ப்பாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் மத்திய அரசு ரூ.13.7 லட்சம் கோடியை பயனுள்ள மூலதன முதலீட்டுக்காக ஒதுக்கியுள்ளது. இது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தில் 4.5 சதவீதமாகும்.

### *மாநில அரசுகளின் மூலதன முதலீட்டுக்கு உதவுதல்*

47. உள்கட்டமைப்பு வசதிகளுக்கான முதலீட்டுக்காக மேலும் மாநில அரசுகளுக்கு 50 ஆண்டுகள் வட்டியில்லா கடன்களை தொடர்ந்து வழங்க முடிவு செய்துள்ளேன். இந்த கடன்கள் மேலும் ஓராண்டுக்கு வழங்கப்படும். இதைத்தவிர மாநில அரசுகளின் பயனுள்ள கொள்கைகளை ஊக்குவிக்கும் வகையில், ஊக்குவிக்கும் திட்டங்களுக்கு ரூ.1.3 லட்சம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### *உள்கட்டமைப்பில் தனியார் முதலீட்டுக்கு ஆதரவு*

48. ரயில்வே, சாலைகள், கிராமப்புற உள்கட்டமைப்பு, மின்சாரம் போன்றவற்றில் தனியார் நிறுவனங்களின் முதலீட்டை ஊக்குவிக்கும்

நடவடிக்கைகளுக்கு, புதிதாக அமைக்கப்பட்டுள்ள உள்கட்டமைப்பு நிதி செயலகங்கள் உதவும்.

***ஒருங்கிணைந்த உள்கட்டமைப்பு முதன்மை பட்டியல்***

49. விடுதலையின் அமிர்தக் பெருவிழாவையொட்டி ஒருங்கிணைந்த உள்கட்டமைப்பு முதன்மை பட்டியல் நிபுணர் குழு மூலம் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு தகுந்த நிதி வழிகாட்டு நெறிமுறைகள் பரிந்துரை செய்யப்படும்.

***ரயில்வே***

50. ரயில்வே மூலதனச் செலவிற்காக ரூ.2.4 லட்சம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது முன் எப்போதும் இல்லாத வகையிலான முதலீடு மட்டுமல்லாமல், 2013-14-ல் ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவைக் காட்டிலும் 9 மடங்கு அதிகமாகும்.

***தளவாடங்கள்***

***51.*** கடைசி மற்றும் முதல் துறைமுக இணைப்பு துறைமுகம், நிலக்கரி, எஃகு, உரம் மற்றும் உணவுதானியத் துறைகளில் 100-க்கும் மேற்பட்ட முக்கியமானப் போக்குவரத்து உள்கட்டமைப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படும். இதில் தனியார் நிறுவனங்களின் ரூ.15,000 கோடி முதலீட்டுடன், ரூ.75,000 கோடி மூதலீடு செய்வதற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

***பிராந்திய இணைப்பு***

52. பிராந்திய அளவிலான வான்வழி இணைப்பை மேம்படுத்தும் வகையில், 50 விமான நிலையங்கள், டெலிபேட்ஸ் உள்ளிட்டவற்றை அமைப்பதற்காக நிலங்கள் ஆய்வு செய்யப்படும்.

***எதிர்காலத்திற்கான நிலையான நகரங்கள்***

53. எதிர்காலத்திற்கான நிலையான நகரங்களை உருவாக்குவதற்காக நகர்ப்புற திட்டங்களில் சீர்திருத்தங்களை உருவாக்கி மாநிலங்கள் மற்றும் நகரங்கள் மேம்படுத்தப்பட உள்ளன. அதாவது, நிலவளங்களை பயனுள்ள வகையில் பயன்படுத்துதல், நகர உள்கட்டமைப்பு வசதிகளை பயன்படுத்திக் கொள்ளுதல், நகர்ப்புறங்களை உள்கட்டமைப்புகளை குறைந்த செலவில் பயன்படுத்திக் கொள்ள அனுமதித்தல் உள்ளிட்ட வாயப்புகளை அனைவருக்கும் வழங்குதல் ஆகும்.

***நகராட்சி நிர்வாக ஒப்பந்தங்களுக்காக நகரங்களை தயார்படுத்துதல்***

*54.* சொத்து வரிகளில் சீர்திருத்தங்களை உருவாக்குதல், நகர்ப்புற உள்கட்டமைப்பு வசதிகளைப் பயன்படுத்துவதற்கான கட்டணங்களை குறைத்தல் ஆகியவற்றின் மூலம் நகராட்சி நிர்வாக ஒப்பந்தங்களுக்கு இணையாக நகரங்களின் மதிப்பை அதிகரிக்க மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

***நகர உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி***

55. முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் ஒன்றான உள்கட்டமைப்பு துறையை மேம்படுத்த, கிராமப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியம், நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியம் ஆகியவை உருவாக்கப்படும். இவை தேசிய வீட்டு வசதி வங்கியால் நிர்வகிக்கப்பட்டு 2-ம் தர மற்றும் 3-ம் தர நகரங்களில் பொது அமைப்புகள் மூலம் உள்கட்டமைப்பு வசதி ஏற்படுத்தப்படும். இவ்விரு நிதியத்தையும் ஊக்குவிக்கும் மாநில அரசுகளுக்கு 15-வது நிதி குழுவின்படி மானியம் வழங்கப்படும். இந்த மானியத்தை ஆண்டுக்கு ரூ.10,000 கோடியாக ஒதுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

***நகர்ப்புற சுகாதாரம்***

*56.* அனைத்து நகரங்கள் மற்றும் டோன் பஞ்சாயத்துகளில் உள்ள எல்லா பாதாளச் சாக்கடைகளும் 100 சதவீதம் இயந்திரங்கள் மூலம் கழிவுகளை அகற்றும் வசதியை உள்ளடக்கியதாக மாற்றப்படும். குறிப்பாக இந்த பாதாளச் சாக்கடைகளில், கழிவுகளை அகற்றி சுத்தப்படுத்தும் பணி தொழில்நுட்ப வசதியுடன் மேற்கொள்ளப்படும்.

***முக்கியத்துவம் 3: திறமையை வெளிக்கொணர்தல்***

*57.* நாட்டின் வளர்ச்சிக்கு நல்லாட்சியே அடிப்படை இதன் அடிப்படையில், நாட்டு குடிமக்களின் நலனை கருத்தில் கொண்டு நேர்மையான நிர்வாகத்தை உறுதி செய்ய, இந்த அரசு உறுதிப்பூண்டுள்ளது என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

***கர்மயோகி இயக்கம்***

58. கர்மயோகி இயக்கத்தின் கீழ் மத்திய மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் அரசு ஊழியர்களை உருவாக்குவதற்கான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதற்காக இணையதளம்

மூலம் ஒருங்கிணைந்த பயிற்சிகள் கர்மயோகி இயக்கத்தின் கீழ் வழங்கப்படுகிறது. இதன் மூலம் அரசு ஊழியர்கள் தங்களது திறமைகளை மேம்படுத்திக் கொள்வதுடன் மக்களை மையப்படுத்தி அணுகுமுறையை கையாள்வதற்கும் ஆலோசனைகள் வழங்கப்படும்.

59. தொழிலை எளிமையானதாக மாற்ற ஏதுவாக 39 ஆயிரம் இணக்கங்கள் குறைக்கப்பட்டதுடன் 34 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சட்ட விதிகள் குற்றமற்றவை என அறிவிக்கப்பட்டன. அதே போல் அரசின் மீதான மக்களின் நம்பிக்கை அதிகரிக்கும் வகையில், 42 சட்ட விதிகளில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக ஜன் விஸ்வாஸ் சட்ட மசோதாவை அறிமுகப்படுத்தியுள்ளது. நாட்டு மக்களின் திறமையை வெளிக்கொண்டு வருவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்த பட்ஜெட்டில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

### *செயற்கை நுண்ணறிவுக்கான மையங்கள்*

*60.* நாட்டிற்காக அனைத்து பணிகளையும் செய்வோம் என்ற தொலைநோக்கு கண்ணோட்டத்தின் அடிப்படையில், முன்னணி கல்வி நிறுவனங்களில் 3 செயற்கை நுண்ணறிவு மையங்கள் ஏற்படுத்தப்படும். இந்த மையங்கள் முன்னணி தொழில்நிறுவனங்களுடன் இணைந்து, நிலையான நகரங்களில் வேளாண்மை, சுகாதாரம் உள்ளிட்ட துறைகளில், எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதுடன், நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாடு குறித்து ஆராய்ச்சி மேற்கொள்ளும்.

### *தேசிய தரவு ஆளுமைக் கொள்கை*

61. ஸ்டார்ட்-அப் மற்றும் கல்வி நிறுவனங்களில் ஆராய்ச்சி நிறுவனங்களின் புத்தாக்க முயற்சிகளுக்காக தேசிய தரவு ஆளுமைக் கொள்கை உருவாக்கப்படும். இதன் மூலம் ஆராய்ச்சிக் குறித்த தரவுகள் பகிரப்படும்.

### *உங்கள் நுகர்வோரை தெரிந்து கொள்ளுங்கள் திட்டத்தை எளிமையாக்குதல்*

*62.* உங்கள் நுகர்வோரைத் தெரிந்து கொள்ளுங்கள் என்னும் கேஒய்சி முறையை எளிமைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. டிஜிட்டல்மயமாக்கலின் தேவையைப் பூர்த்தி செய்ய ஏதுவாக கேஒய்சி முறை முழுவதுமாக திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

***அடையாளம் மற்றும் முகவரியை மேம்படுத்த ஒரே புள்ளியில் தீர்வு***

*63.* பல்வேறு அரசு ஆவணங்களில் இடம்பெற்றுள்ள தனிநபர்களின் அடையாளங்கள் மற்றும் முகவரியை எளிமையாக மாற்றியமைத்துக் கொள்ளவும் உதவும் வகையில், ஒருப்புள்ளி தீர்வு என்ற அடிப்படையில், டிஜிட்டல்-லாக்கர் சேவை மையம் உருவாக்கப்படும். இந்த சேவைக்கு ஆதார் அட்டை மட்டுமே அடிப்படை ஆதாரமாக எடுத்துக்கொள்ளப்படும்.

***தொழில் நிறுவனங்களுக்கானப் பொது அடையாளம்***

*64.* தொழில்நிறுவனங்களை நிர்வகிக்க நிரந்தர கணக்கு எண் எனப்படும் (பிஎஎன்) உருவாக்கப்பட்டு, இந்த எண் குறிப்பிட்ட அரசு ஏஜென்சிகளின் அனைத்து டிஜிட்டல் முறைகளிலும் பொதுவான அடையாள எண்ணாக பதிவு செய்யப்படும். இந்த நடைமுறையைக் கடைப்பிடிக்க வேண்டியது கட்டாயமாக்கப்படும்.

***65. ஒருங்கிணைந்த விண்ணப்ப முறை***

*65.* பல்வேறு அரசு ஏஜென்சிகளில் தனிநபர் சார்ந்த தனிப்பட்ட தகவல்கள், தனித்தனியாக சமர்ப்பிக்கப்படுவதைத் தவிர்க்கும் வகையில், ஒருங்கிணைந்த விண்ணப்ப முறை உருவாக்கப்படும். இதன் மூலம் தனிநபரின் தகவல்கள் ஒரு பொதுவான இணையத்திற்குள் கொண்டு வரப்பட்டு அங்கிருந்து மற்ற ஏஜென்சிகளுக்கு விண்ணப்பதாரர்களின் விருப்பத்துக்கு ஏற்ப அனுப்பி வைக்கப்படும்.

***எம்எஸ்எம்இ-க்களுக்கு நிவாரணம்***

*66.* கொரொனா பெருந்தொற்று காலங்களில் ஒப்பந்தங்களை செயல்படுத்த இயலாமல் போகும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு (எம்எஸ்எம்இ) உதவும் வகையில், அவை ஏலத்தில் எடுத்த தொகையில் 95 சதவீத தொகை அரசு சார்பில் வழங்கப்படும். இது எம்எஸ்எம்இ-க்களுக்கு பெரிய நிவாரணமாக இருக்கும்.

***ஒப்பந்த சிக்கல்களுக்கு தீர்வு***

**67.** அரசு மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு இடையேயான ஒப்பந்தம் தொடர்பான வழக்குகள் நீதிமன்றத்தில்

நிலுவையில் இருப்பதைக் கருத்தில் கொண்டு, அதனைத் தீர்க்க ஏதுவாக தன்னார்வ தீர்வு திட்டம் (விஎஸ்எஸ்) விரைவில் அறிமுகப்படுத்தப்படும். இந்த திட்டத்தின் மூலம் நீண்ட காலம் நிலுவையில் வழக்குகள் தீர்த்து வைக்கப்படும்.

### *மாநில உறுதுணை இயக்கம்*

*68.* தேசிய முன்னுரிமை வாய்ந்த திட்டத்திற்கு அனைவரது ஒத்துழைப்பையும் அளிக்கும் வகையில், மாநிலங்களுக்கு ஆதரவு அளிக்கும் நித்தி ஆயோக் திட்டம் அடுத்த 3 ஆண்டுகளுக்கு தொடரும்.

### *முடிவுகளின் அடிப்படையில் நிதி*

*69.* நாட்டின் வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு, அதற்கு ஆதரவு அளிக்கும் குறிப்பிட்ட திட்டங்களுக்கு வழங்கப்படும் நிதியை சிறந்த முடிவுகளின் அடிப்படையில் மாற்றியமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

### *இ-நீதிமன்றங்கள்*

70. நீதித்துறையின் விரைவான நிர்வாகத்திற்கு ஏதுவாக 3-ம் கட்ட இ-நீதிமன்றங்களின் திட்டம் ரூ. 7 ஆயிரம் கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

### *ஃபின்டெக் தொழில்நுட்ப சேவைகள்*

*71.* ஆதார், ஜந்தன் வங்கிக் கணக்கு, கேஒய்சி யுபிஐ உள்ளிட்ட டிஜிட்டல் பொது உள்கட்டமைப்புகளை நிர்வகிப்பதற்காக தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய ஃபின்டெக் சேவை செயல்படுத்தப்படும். இதன் அடிப்படையில் தனிநபர்களின் தரவுகள் இடம்பெற்றுள்ள டிஜிட்டல்-லாக்கர் முறை விரிவுபடுத்தப்படும்.

### *நிறுவனங்களுக்கான டிஜி-லாக்கர்*

72. குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், (எம்எஸ்எம்இ) மிகப்பெரிய தொழில் நிறுவனங்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்காக சிறப்பு டிஜிட்டல்-லாக்கர்கள் அமைக்கப்படும். இந்த டிஜிட்டல்-லாக்கர்கள் பல்வேறு நிறுவனங்கள், அமைப்புகள் வங்கிகள் மற்றும் தொழில் நிறுவனங்களின் ஆவணங்களை இணைதளத்தில் பாதுகாப்பாக சேமித்து வைக்கும்.

### *5 ஜி அலைவரிசை சேவை*

*73.* பொறியியல் கல்வி நிறுவனங்களில் 5 ஜி அலைவரிசையைப் பயன்படுத்தி 100 ஆய்வகங்கள் உருவாக்கப்பட்டு புதிய வேலைவாய்ப்புகள் மற்றும் தொழில் நிறுவன மாதிரிகள் உருவாக்கப்படும். இந்த ஆய்வகங்கள், ஸ்மார்ட் வகுப்பறைகள், வேளாண்மை தொடர்பான துல்லியமான தகவல்கள், சுகாதார வசதிகள் உள்ளிட்டவற்றை உள்ளடக்கியிருக்கும்.

### *ஆய்வகங்களில் வளரும் வைரங்கள்*

74. ஆய்வகங்களில் வளர்க்கும் வைரங்கள் என்ற தொழில்நுட்பம் அதிக வேலைவாய்ப்புகளைக் உள்ளடக்கிய புத்தாக்கங்களை புதிய ஆராய்ச்சிகளைக் கொண்ட வளர்ந்து வரும் துறையாகும். ஒளியியல் ரீதியாகவும், ரசாயணத்தின் உதவியுடனும் உருவாக்கப்படும் இந்த சுற்றுச்சூழலுக்குக் கேடு விளைவிக்காத வைரங்கள், இயற்கை வைரங்களின் குணாதிசியங்களைக் கொண்டவையாகும். உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ஆய்வகங்களில் வளரும் வைரங்களின் (எல்ஜிடி) விதைகள் இறக்குமதிக்கான சார்ந்திருத்தலைக் குறைக்கிறது. இதற்கான ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் திட்டம், அடுத்த 5 ஆண்டுகளுக்கு, நாட்டில் இயங்கும் மத்திய தொழில்நுட்ப நிறுவனங்களுள் ஏதேனும் ஒன்றிற்கு வழங்கப்படும்.

75. உற்பத்தி செலவைக் குறைக்கும் வகையில், எல்ஜிடி விதைகளுக்கான சுங்கவரியை மறுஆய்வு செய்ய பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

### *முன்னுரிமை 5: பசுமை வளர்ச்சி*

*76.* சுற்றுச்சூழலுக்கு உகந்த வாழ்க்கை முறையை இயக்கமாக மாற்றும் வகையில், எல்ஜஃப்இ என்னும் ஆரோக்கியமான வாழ்க்கை முறை பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையில் இடம் பெற்றுள்ளது. 2070-ம் ஆண்டு கரியமிலவாயு வெளியேற்றம் இல்லாத சுற்றுச்சூழலை உருவாக்க இந்தியா முனைப்பாக இருப்பதால் அதற்கு ஏதுவாக பசுமை தொழிற்சாலைகள் உருவாக்கப்படும். இந்த பட்ஜெட்டில் பசுமை வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

### *பசுமை ஹைட்ரஜன் இயக்கம்*

*77.* அண்மையில் ரூ.19,700 கோடி செலவில் அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கம், குறைந்த கார்பன் பயன்பாட்டை ஊக்குவித்தல், படிம எரிபொருள் இறக்குமதியை குறைத்தல், சூரியசக்தி

சார்ந்த சந்தை வாய்ப்புகளை மேம்படுத்துதல் உள்ளிட்டவற்றை உள்ளடக்கியது. இதன் மூலம் 2030-ம் ஆண்டிற்குள் வருடாந்திர பசுமை ஹைட்ரஜன் உற்பத்தியை 5 எம்எம்டி அளவுக்கு மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

*எரிசக்தி பகிர்மானம்*

78. மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயு அமைச்சகத்தின் சார்பில் எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, இந்த பட்ஜெட்டில் எரிசக்தி பகிர்மானத்திற்கான மூலதன முதலீட்டுக்கு ரூ.35 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

*எரிசக்தி சேமிப்புத் திட்டங்கள்*

*79.* இந்திய பொருளாதாரத்தை நீடித்த வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல ஏதுவாக, 4 ஆயிரம் எம்டபிள்யுஹெச் திறன் கொண்ட பேக்டரி எரிசக்தி சேமிப்பு முறை உருவாக்கப்படும். அதே நேரத்தில் உந்தப்பட்ட சேமிப்பு திட்டங்களுக்கான விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் விரைவில் உருவாக்கப்படும்.

*புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வெளியேற்றம்*

*80.* மாநிலங்களுக்கு இடையேயான எரிசக்தி பகிர்மான முறையை கருத்தில் கொண்டு, மத்திய தொகுப்புக்கு 13 ஜிகாவாட்ஸ் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை வழங்க ஏதுவாக லடாக்கில் ரூ.20,700 கோடி முதலீட்டில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆலை உருவாக்கப்படும். இதற்கு மத்திய அரசு சார்பில் ரூ.8,300 கோடி வழங்கப்படும்.

*பசுமை ஆதரவுத் திட்டம்*

*81.* சுற்றுச்சூழல் பாதுகாப்பு விதியின் கீழ் மக்களின் மனநிலையை மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில், பசுமை ஆதரவு திட்டம் செயல்படுத்தப்படும். இதன்படி சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும் தனியார் நிறுவனங்கள், தனிநபர்கள் மற்றும் அமைப்புகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படும். இந்த நடவடிக்கை இயற்கை வளங்களைப் பாதுகாக்க அடிகோலும் என நம்பபடுகிறது.

*பிஎம்-பிரனாம்*

*82.* அன்னை பூமியை பாதுகாத்து, மண்ணிற்கு ஊட்டச்சத்து அளிப்பது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், பிஎம் பிரனாம் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இதன் மூலம் ரசாயன

உரங்களுக்கு மாற்றாக இயற்கை உரங்களைப் பயன்படுத்தும் மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படும்.

***கோபர்தன் திட்டம்***

83. கோபர்தன் திட்டத்தின் கீழ், வேளாண் மற்றும் கால்நடை கழிவுகளைக் கொண்டு 500 தாவரங்களை வளர்க்கும் திட்டம் செயல்படுத்தப்படும். இதில் நகர்ப்புறங்களில் 75 தாவரங்கள் வளர்க்கப்பட உள்ளன. இந்த திட்டத்திற்கு மொத்த முதலீடாக ரூ.1,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

***உயிரி வள மையங்கள்***

84. அடுத்த மூன்று ஆண்டுகளில் 1 கோடி விவசாயிகளை இயற்கை வேளாண்மைக்குள் கொண்டுவர இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்காக 10,000 உயிரி வள மையங்கள் ஏற்படுத்தப்பட்டு, தேசிய அளவில் நுண்-உரங்கள் விநியோகம் செய்யப்பட உள்ளன.

***மிஸ்தி***

***85.*** காடுகளை வளர்க்கும் திட்டத்தின் அடுத்த கட்டமாக கடற்கரையோரப் பகுதிகளில், சதுப்பு நிலத் தோட்டங்களை வளர்க்கும் மிஸ்தி திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இதன்படி கடற்கரையோரங்கள் மற்றும் ஈரநிலங்களில், மாங்ரோவ் காடுகள் உருவாக்கப்படும்.

***அம்ரித் தரோஹர்***

86. ஈர நிலங்கள் நீடித்த பல்லுயிர் பன்முகத்தன்மையை நிலைநிறுத்தும். இது தொடர்பாக கடந்த மாதம் தமது மனதின் குரல் நிகழ்ச்சியில் பேசிய பிரதமர், நாட்டில் உள்ள ராம்சார் தளங்களின் எண்ணிக்கை 75-ஆக அதிகரித்திருக்கிறது. இந்த எண்ணிக்கை 2014-ம் ஆண்டிற்கு வெறும் 26-ஆக இருந்தது. எனவே உள்ளூர் மக்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தினார். எனவே தனித்துவம் வாய்ந்த தளங்களைப் பாதுகாக்கும் வகையில், அம்ரித் தரோஹர் திட்டம் செயல்படுத்தப்படும். இந்த திட்டம் அடுத்த 3 ஆண்டுகளுக்கு ஈர நிலங்களைப் பாதுகாத்து, பல்லுயிர் பன்முகத்தன்மையை மேம்படுத்தி, சுற்றுச்சூழல்-சுற்றுலா வாய்ப்புகளை உருவாக்கி, உள்ளூர் மக்களுக்கு வருமானத்தை அளிக்கும்.

***கடலோரக் கப்பல் போக்குவரத்து***

*87.* கடல்வழிப் போக்குவரத்தை குறைந்த செலவிலானப் போக்குவரத்தாக மாற்றும் வகையில், கடலோர கப்பல் போக்குவரத்துத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இதில் தனியார் பங்களிப்போடு பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்தும் இடம்பெறும்.

### *வாகனங்களுக்கு மாற்று*

*88.* பழைய வாகனங்களை மாற்றிக் கொள்வது, பசுமை பொருளாதாரம் என்ற இலக்கை அடைவதில் முக்கியப் பங்காற்றும். இதனைக் கருத்தில் கொண்டு 2021-22-ம் நிதியாண்டின் பட்ஜெட்டில் வாகன அழிப்புக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி மத்திய அரசின் பயன்பாட்டில் உள்ள பழைய வாகனங்களை அழிக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதேபோல் மாநில அரசுகளும், பழைய வாகனங்கள் மற்றும் ஆம்புலன்ஸ்களை மாற்றிக் கொள்ள முன்வர வேண்டும்.

### *முக்கியத்துவம் 6: இளைஞர் சக்தி*

*89.* இளைஞர்களை அதிகாரமிக்கவர்களாக மாற்ற உதவுவதற்காக அம்ரித் பீதி திட்டம் செயல்படுத்தப்படும். இளைஞர்களின் கனவுகள் நிறைவேற உதவும் வகையில், மத்திய அரசு தேசிய கல்வி கொள்கையை உருவாக்கியுள்ளது. திறன்களை மேம்படுத்துதல், பொருளாதார கொள்கைகளை ஏற்றுக்கொண்டு சிறந்த வேலைவாய்ப்புகளை உருவாக்குவதுடன், தொழில் வாய்ப்புகளுக்கு அதரவு அளிப்பதே இந்தக் கொள்கையின் சிறப்பு அம்சங்கள்.

### *பிரதமரின் கௌசல் விகாஷ் திட்டம் 4.0*

*90.* அடுத்த 3 ஆண்டுகளில், லட்சக்கணக்கான திறன்மிக்க இளைஞர்களை உருவாக்குவதற்காக, பிரதமரின் கௌசல் விகாஷ் திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இந்த திட்டத்தின் கீழ் ரோபேட்டிக்ஸ், மெக்காட்ரானிக்ஸ், ஐஒடி, 3டி பிரிண்டிங், ட்ரோன் தொழில்நுட்பம் ஆகியவற்றில் பயிற்சிகள் அளிக்கப்படும். சர்வதேச வாய்ப்புகளுக்கு ஏற்ப இளைஞர்களை திறன்படைத்தர்வகளாக மாற்றுவதற்காக பல்வேறு மாநிலங்களில் 30 இந்திய சர்வதேச திறன் மேம்பாட்டு மையங்கள் அமைக்கப்படும்.

### *ஸ்கில் இந்தியா டிஜிட்டல் முறை*

91. திறன்களை மேம்படுத்துவதற்கான டிஜிட்டல் சுற்றுச்சூழல் அமைப்பை விரிவுப்படுத்தும் வகையில், தனித்துவம் வாய்ந்த ஸ்கில் இந்திய டிஜிட்டல் பிளார்ட் ஃபார்ம் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

- தேவைப்படும் திறன்களுக்கு ஏற்ப பயிற்சி
- *எம்எஸ்எம்இ-க்கள் உள்ளிட்ட நிறுவனங்களை இணைத்தல்*
- *தொழில்முனைவோர் திட்டங்களை எளிமையாக்குதல்*

***தேசிய தொழில்பழகுனர் மேம்பாட்டுத் திட்டம்***

92. நேரடி வங்கிக் கணக்கு மூலம் ஊக்கத்தொகை வழங்கும் வகையிலான தேசிய தொழில்பழகுனர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும். இதன் மூலம் அடுத்த 3 ஆண்டுகளில் 47 லட்சம் இளைஞர்களுக்கு ஊக்கத்தொகையுடன் கூடிய பயிற்சி அளிக்கப்படும்.

***93.*** ஒருங்கிணைந்த மற்றும் புதுமையான அணுகுமுறையுடன் குறைந்தது 50 தலங்கள் சவாலான வழிமுறைகள் மூலம் தெரிவு செய்யப்படும். கூடுதலாக நேரடி தொடர்பு, இணையதள தொடர்பு, சுற்றுலா வழிகாட்டிகள், உயர் தரத்திலான உணவுச் சாலைகள் மற்றும் சுற்றுலா பயணிகளுக்கான பாதுகாப்பு போன்ற அம்சங்களில் சுற்றுலா அனுபவங்களை மேம்படுத்த ஏதுவாக செல்போன் செயலியில் அறிமுகப்படுத்தப்படும். ஒவ்வொரு சுற்றுலா தலத்திற்குமான மேம்படுத்தப்பட்ட முழுமையான தொகுப்பு உருவாக்கப்படும். உள்நாடு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாத் துறையின் வளர்ச்சியில் கவனம் செலுத்தப்படும்.

94. ‘நமது நாட்டை பாருங்கள் என்ற முன் முயற்சியின் நோக்கங்களை அடையும் வகையில், துறை சார்ந்த குறிப்பிட்ட திறன் மற்றும் தொழில்முனைவோர் தன்மை மேம்படுத்தப்படும். சர்வதேச சுற்றுலாவைக்காட்டிலும், உள்நாட்டு சுற்றுலாவில் நடுத்தர பிரிவைச் சேர்ந்த மக்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் இந்தத் திட்டத்தை பிரதமர் தொடங்கிவைத்துள்ளார். கருப்பொருள் அடிப்படையிலான சுற்றுலா வளாகங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் சுதேஷ் தர்ஷன் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. துடிப்புமிக்க கிராம திட்டத்தின்கீழ்,

எல்லையோர கிராமப்பகுதிகளில் சுற்றுலாவிற்கான உள்கட்டமைப்பு மற்றும் வசதிகள் மேம்படுத்தப்படும்.

95. ஒருங்கிணைந்த வர்த்தக வளாகம் மாநில தலைநகரங்கள் அல்லது முக்கிய சுற்றுலாத்தலங்கள் அல்லது நிதிசார் தலைநகரங்களில் ஒருங்கிணைந்த வர்த்தக மையங்களை அமைத்து ஒரு மாவட்டம் ஒரு பொருள் என்ற திட்டத்தின்கீழ், விற்பனையகங்களை அமைக்க மாநிலங்கள் ஊக்குவிக்கப்படும். புவிசார் குறியீடு கொண்ட பொருட்கள் மற்றும் பிற கைவினைப்பொருட்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருள்களையும் பிற மாநிலங்களிலும் கிடைக்கச் செய்யும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

96. ஏழாவது முன்னுரிமை: நிதித்துறை
நிதித்துறையில் மேற்கொள்ளப்படும் சீர்திருத்த நடவடிக்கைகள் மற்றும் நிதிசார் உள்ளடக்கங்களான விரைவான மற்றும் சிறந்த சேவைகள் ஆகியவற்றை முன்னிலைப்படுத்திய தொழில்நுட்ப பயன்பாடு. கடன் அணுகுமுறைகளை எளிமைப்படுத்துவது, நிதிச்சந்தைகளின் பங்கேற்புடன் இந்த சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

97. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான கடன் உத்தரவாதம்: குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான கடன் உத்தரவாதத் திட்டத்தை மறுசீரமைப்பது குறித்து கடந்த ஆண்டு முன்மொழியப்பட்டது. இதற்கான அறிவிப்பு 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதியிலிருந்து ரூ.9,000 கோடி தொகுப்பு நிதியுடன் அமலுக்கு வரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தின்மூலம் ரூ.2 லட்சம் கோடி வரை பிணையில்லா கூடுதல் உத்தரவாத கடன் பெற வழிவகை செய்கிறது. மேலும் இந்த கடன்களுக்கான செலவீனங்கள் ஒரு சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

98. தேசிய நிதிசார் தகவல் பதிவகம்:
மத்திய நிதி தொடர்பான தகவல் மற்றும் துணைத் தகவல்களுக்கான களஞ்சியம் போல செயல்படும் தேசிய நிதிசார் தகவல் பதிவகம் உருவாக்கப்படும். இதன்மூலம் நிதி உள்ளடக்கம், கடன் வழங்கல் மற்றும் நிலையான நிதி

செயல்பாடுகளுக்கு வழிவகுக்கும் கடன்களுக்கான பொது உள்கட்டமைப்பை நிர்வகிப்பதற்கு புதிய சட்ட கட்டமைப்பு ரிசர்வ் வங்கியின் ஆலோசனையின் பேரில் வடிவமைக்கப்படும்.

99. நிதித்துறை சார்ந்த ஒழுங்குமுறைகள்:
அமிர்த காலத்தின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் நிதித்துறை ஒழுங்குமுறைகள் உகந்த முறையில் வடிவமைக்கவும், பொது ஆலோசனை மற்றும் விதிமுறைகளுக்கான நடைமுறைகளை செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் ஆலோசிக்கப்படும்.

100. நிதித்துறை சார்ந்த விதிகளில் ஏற்கனவே உள்ள நடைமுறைகள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டு குறைந்த செலவிலான மற்றும் எளிமையான நடைமுறைகள் உருவாக்கப்படும். இதற்கென பொதுமக்கள் மற்றும் நிறுவனங்களின் ஆலோசனைகள் பரிசீலிக்கப்படும். பல்வேறு விதிமுறைகளை வகுப்பதில் கால அவகாசம் முடிவு செய்யப்படும்.

101. கிஃப்ட் ஐஎஃப்எஸ்சி: கிஃப் நகரத்தில் ஐஎஃப்எஸ்சி குறியீட்டுடன் மேற்கொள்ளப்படும் வர்த்தகம் சார்ந்த நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு பின்வரும் அளவீடுகள் கருத்தில் கொள்ளப்படும். 1. சிறப்புப் பொருளாதார மண்டல சட்டத்தின்கீழ், அதிகார பரவலாக்கத்தில் இரட்டை விதிமுறைகள் தவிர்க்கப்படும். 2. வருமான வரிமுறையில் பதிவுகள் மற்றும் அனுமதிக்கு ஒற்றைச்சாளர முறை ஏற்படுத்தப்படும். இதன்மூலம் ஐஎஃப்எஸ்சிஏ, சிறப்புப் பொருளாதார மண்டல ஆணையர்கள் ஜிஎஸ்டி வலைதளம், ரிசர்வ் வங்கி, இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியம் மற்றும் இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்தின் அனுமதியைப் பெற வழிவகுக்கும்.

- **ஐஎப்எஸ்சி மூலம் வெளிநாட்டு வங்கிகளில் நிதி பெறுதல்**
- **வர்த்தக மறு நிதிக்காக துணை எக்சிம் வங்கியை உருவாக்குதல்**

- சிறப்பு பொருளாதார மண்டல சட்டத்தின் கீழ் நடுவர் மன்றம், துணை சேவைகள், இரட்டை ஒழுங்குமுறையை தவிர்த்தல் ஆகியவற்றுக்காக சட்டப்பூர்வ விதிமுறைகளுக்கு ஐஎப்எஸ்சிஏ சட்டத்தை அமல்படுத்துதல்
- கடல் வழித் தோன்றல் கருவிகள், செல்லுபடியாகும் ஒப்பந்தங்களாக அங்கீகரித்தல்

தரவு தூதரகம்

102. டிஜிட்டல் தொடர் தீர்வுகளை எதிர்கொள்ளும் நாடுகளுக்காக ஜிஐஎப்டி ஐஎப்எஸ்சி-ல் அவர்களுடைய தரவு தூதரகங்களை அமைக்க நாம் வசதி ஏற்படுத்தி தருவோம்

வங்கித்துறையில் நிர்வாகத்தை மேம்படுத்துதல் மற்றும் முதலீட்டாளர் பாதுகாப்பு

103. வங்கி நிர்வாகம் மற்றும் முதலீட்டாளர் பாதுகாப்பை மேம்படுத்த வங்கி ஒழுங்குமுறை சட்டம், வங்கி நிறுவன சட்டம், இந்திய ரிசர்வ் வங்கி ஆகியவற்றில் சில திருத்தங்களை மேற்கொள்ள பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

பங்குச் சந்தையில் திறன் கட்டமைப்பு

104. பங்குச் சந்தையில் திறன் கட்டமைப்பு, பங்குச் சந்தையில் பணிகள் மற்றும் தொழில் செயல்பாடுகளின் திறனை கட்டமைக்க தேசிய பங்குச்சந்தைகள் கழகத்தில் கல்விக்கான தரம் மற்றும் விதிமுறைகளை அமல்படுத்துதல், பராமரித்தல், ஒழுங்குபடுத்துதல் போன்றவற்றுக்கும் பட்டங்கள், பட்டயங்கள், சான்றிதழ்கள் வழங்குவதற்கு ஆகியவற்றுக்கு செபி-க்கு அதிகாரம் அளிக்கப்படும்.

மத்திய தரவு செயல்பாட்டு மையம்

105. நிறுவன சட்டத்தின் கீழ் கள அலுவலகங்களுடன் பல்வேறு விண்ணப்பங்களை பரவலாக கையாளுவதன் மூலம் நிறுவனங்களுக்கு விரைவாக பதிலளிக்க மத்திய தரவு செயல்பாட்டு மையம் அமைக்கப்படும்.

பங்குகள் மற்றும் ஈவுத்தொகைகளை திரும்பப் பெறுதல்

106. முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையத்தில் இருந்து உரிமை கோரப்படாத பங்குகள் மற்றும் செலுத்தப்படாத ஈவுத் தொகைகளை முதலீட்டாளர்கள் எளிதாக திரும்பப் பெறுவதற்கு ஒருங்கிணைந்த தகவல் தொழில்நுட்ப இணைய தளம் ஏற்படுத்தப்படும்.

டிஜிட்டல் பரிவர்த்தனை

107. டிஜிட்டல் பரிவர்த்தனைகள் விரிவாக ஏற்றுக்கொள்ளப்படுவது தொடரும். 2022-ம் ஆண்டில் 76 சதவீதம் அளவுக்கு பரிவர்த்தனைகள் அதிகரித்து காணப்பட்டது மற்றும் மொத்த பரிவர்த்தனை 91 சதவீதம். இந்த டிஜிட்டல் பொது உள்கட்டமைப்புக்கான நிதி உதவி 2023-24-ம் நிதி ஆண்டிலும் தொடரும்

அமிர்தகால விடுதலைப் பெருவிழா மகளிர் சேமிப்பு பத்திரம்

108. அமிர்தகால விடுதலைப் பெருவிழா நினைவாக ஒருமுறை மட்டும் செலுத்தப்படும் புதிய சிறிய சேமிப்பு திட்டம், மகளிர் சேமிப்பு பத்திரம் 2 வருட காலத்திற்கு மார்ச் 2025 வரை வழங்கப்படும். இதன் மூலம் மகளிர் அல்லது பெண் குழந்தைகள் பெயரில் 2 வருட காலங்களுக்கு 2 லட்சம் ரூபாய் வரை முதலீடு செய்ய முடியும். பகுதி அளவு தொகை திரும்பப் பெறக்கூடிய வசதியுடன் 7.5 சதவிகித வட்டி அளிக்கப்படும்.

மூத்த குடிமக்கள்

109. மூத்த குடிமக்களுக்கான சேமிப்பு திட்டத்தின் அதிகபட்ச முதலீட்டு தொகை 15 லட்சம் ரூபாயில் இருந்து 30 லட்சம் ரூபாயாக அதிகரிக்கப்படுகிறது.

110. மாதாந்திர வருமான கணக்கு திட்டத்திற்கான அதிகபட்ச முதலீட்டு வரைமுறை 4.5 லட்ச ரூபாயில் இருந்து 9 லட்சம் ரூபாயாக ஒரு நபர் கணக்கிற்கு அதிகரிக்கப்படும். கூட்டு கணக்குகளுக்கு 9 லட்சம் ரூபாயில் இருந்து 15 லட்சம் ரூபாயாக அதிகரிக்கப்படும்.

நிதி மேலாண்மை

மாநிலங்களுக்கு 50 வருட வட்டி இல்லா கடன்

111. 2023-24 நிதியாண்டிற்குள் மூலதன செலவில் மாநிலங்களுக்கு 50 வருட வட்டியில்லா கடனாக செலவிடப்படும். இதில்

**பெரும்பாலானவை விருப்பத்தின் அடிப்படையிலான மாநிலங்களுக்கு வழங்கப்படும். ஆனால் மூலதன செலவை அதிகரிக்கும் மாநிலங்களுக்கு இது அளிக்கப்படும் என்ற நிபந்தனை இருக்கும். பின் வருவனவற்றுக்காகவும் நிதி அளிக்கப்படும்.**

- **பழைய அரசு வாகனங்களை அகற்றுதல்**
- **நகர்ப்புற திட்டமிடுதல் சீர்திருத்தங்கள் மற்றும் நடவடிக்கைகள்**
- முனிசிபல் பத்திரங்களில் கடன் வழங்குவதற்காக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நிதி சீர்திருத்தங்கள்
- காவல் நிலையங்களுக்கு அருகே காவலர்களுக்கு வீடு
- பெரிய ஒற்றுமை வணிக வளாகங்களை கட்டுதல்
- குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினருக்கான நூலகங்கள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு
- மத்திய அரசின் திட்டங்களில் மூலதனச் செலவில் மாநிலங்களின் பங்கு

மாநிலங்களின் நிதிப்பற்றாக்குறை

112. மாநிலங்களின் மொத்த உற்பத்தியில் 3.5 சதவீதம் அளவிற்கு நிதி பற்றாக்குறை அனுமதிக்கப்படும். இதில் 0.5 சதவீதம் அளவிற்கு மின்துறை சீர்திருத்தங்களுக்கு அனுமதிக்கப்படும்.

திருத்தி அமைக்கப்பட்ட மதிப்பீடுகள் 2022-23

113. கடன் வாங்குதல் தவிர மொத்த வரவுகளின் திருத்தி அமைக்கப்பட்ட மதிப்பீடுகள் 24.3 லட்சம் கோடி. இதில் மொத்த வரி வரவு 20.9 லட்சம் கோடி. திருத்தி அமைக்கப்பட்ட மொத்த செலவினம் 41.9 லட்சம் கோடி. இதில் மூலதன செலவு 7.3 லட்சம் கோடி

114. பட்ஜெட் மதிப்பீட்டையொட்டி மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நிதி பற்றாக்குறை 6.4 சதவிகிதமாக திருத்தி அமைக்கப்பட்டது.

பட்ஜெட் மதிப்பீடுகள் 2023-24

115. வரும் 2023-24-ம் நிதி ஆண்டில் கடன் வாங்குதல் தவிர, மொத்த வரவு ரூ.27.2 லட்சம் கோடியாகவும், மொத்த செலவு ரூ.45 லட்சம் கோடியாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. மொத்த வரி வருவாய் ரூ.23.3 லட்சம் கோடியாக இருக்கும்.

116. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நிதி பற்றாக்குறை 5.9 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2021-22-ம் ஆண்டுக்கான என்னுடைய நிதிநிலை அறிக்கை உரையில், நிதி ஒருங்கிணைப்பு வழிமுறைகளை தொடர திட்டமிட்டுள்ளதாக நான் அறிவித்திருந்தேன். 2025-26 நிதியாண்டிற்குள் நிதி பற்றாக்குறை 4.5 சதவீதத்திற்கும் கீழ் செல்லும். 2025-26-ம் நிதி ஆண்டிற்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நிதி பற்றாக்குறை 4.5 சதவீதத்திற்கும் கீழ் கொண்டு வர நான் உறுதிபூண்டுள்ளேன்.

117. 2023-24-ஆம் நிதியாண்டில் நிதி பற்றாக்குறைக்கு நிதி அளிக்க பங்குகளில் இருந்து மொத்த கடன் வாங்குதல் தொகை ரூ. 11.8 லட்சம் கோடியாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மீதித்தொகை சிறுசேமிப்பு மற்றும் இதர ஆதாரங்களில் இருந்து கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மொத்த சந்தை கடன் வாங்குதல் மதிப்பு ரூ.15.4 லட்சம் கோடியாக இருக்கும்.
நான் இப்போது பகுதி- ஆ-வுக்கு செல்கிறேன்.

## பகுதி- ஆ
## மறைமுக வரிகள்

118. என்னுடைய மறைமுக வரிகள் பரிந்துரைகள் என்பது ஏற்றுமதியை மேம்படுத்துதல், உள்நாட்டு உற்பத்திக்கு ஊக்கம், பசுமை எரிசக்தியை ஊக்கப்படுத்துதல் மற்றும் பரவலாக்கல் ஆகியவற்றை நோக்கமாக கொண்டது.

119. வரிக்கட்டமைப்பில் எளிமைப்படுத்தியதன் மூலம் சிரமங்களை குறைத்து வரி நிர்வாகத்தை மேம்படுத்தும். ஜவுளிகள், வேளாண் பொருட்கள் இல்லாத சரக்குகளின் அடிப்படை சுங்க வரி விகிதத்தை 21-ல் இருந்து 13 ஆக குறைக்க நான் பரிந்துரைக்கிறேன். அதன் காரணமாக பொம்மைகள், மிதி வண்டிகள், வாகன உதிரி பாகங்கள், நாஃப்தா உள்ளிட்ட சில

பொருட்களின் அடிப்படை சுங்க வரிகள், செஸ் வரிகள் மற்றும் கூடுதல் கட்டணங்களில் சில மாற்றங்கள் இருக்கும்.

பசுமை பரவலாக்கல்

120. அழுத்தப்பட்ட கலப்பு இயற்கை எரிவாயுவில் வரிகளை தவிர்க்க சரக்கு மற்றும் சேவை வரி செலுத்தப்பட்ட அழுத்தப்பட்ட உயிரி எரிவாயுவுக்கு கலால்வரியிலிருந்து விதி விலக்கு அளிக்க நான் பரிந்துரைக்கிறேன். பசுமை பரவலாக்களை மேலும் வளர்ச்சியடையச் செய்ய மின்சார வாகனங்களில் பயன்படுத்தப்படும் பேட்டரிகளுக்கான லித்தியம்-அயன் செல்களின் உற்பத்திக்கு தேவைப்படும் இயந்திரங்கள் மற்றும் மூலதன சரக்குகளின் இறக்குமதிக்கும், சுங்க வரியிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படுகிறது.

மின்னணு

121. அரசின் பல்வேறு முன்னெடுப்புகள் காரணமாக 2014-15-ம் நிதியாண்டில் ரூ.18,900 கோடி மதிப்பில் 5.8 கோடி எண்ணிக்கை அளவிற்கு மொபைல் போன் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட நிலையில் கடந்த நிதியாண்டில் ரூ.2,75,000 கோடி மதிப்பில் 31 கோடி மொபைல் போன்கள் தயாரிக்கப்பட்டது. உள்நாட்டு மொபைல் போன் உற்பத்தியை மேலும் அதிகரிக்க கேமரா லென்ஸ் போன்ற சில இறக்குமதி செய்யப்படும் பாகங்களுக்கு சுங்க வரியில் இருந்து விதி விலக்கு அளிக்க நான் பரிந்துரைக்கிறேன். பேட்டரிகளுக்கான லித்தியம் அயன் செல்களுக்கு சலுகை வரி மேலும் ஓராண்டுக்கு தொடரும்.

122. அதே போல் உள்நாட்டு தொலைக்காட்சி உற்பத்தியின் மதிப்பு கூட்டுதலை ஊக்குவிக்க தொலைக்காட்சி பெட்டியின் உதிரிபாகங்களுக்கான சுங்கவரி 2.5 சதவீதமாக குறைக்கப்படுகிறது.

மின்சாரம்

123. சமையலறை மின் புகை போக்கியின் உற்பத்தியை ஊக்குவிக்க வெப்ப காயிலுக்கான வரி விகிதம் 20 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக குறைக்க பரிந்துரைக்கப்படுகிறது.

ரசாயனம் மற்றும் பெட்ரோ ரசாயனம்

124. குறைந்த காரத்தன்மை உடைய எத்தில் ஆல்கஹால் ரசாயன தொழிற்சாலையில் பயன்படுத்தப்படுகிறது. இதற்கு சுங்க வரியில்

இருந்து விதிவிலக்கு அளிக்க நான் பரிந்துரைக்கிறேன். இது எத்தனால் கலத்தல் முறை மற்றும் எரிசக்தி மாற்றத்திற்கான வசதியை ஏற்படுத்துவதற்கு உதவும். ஆசிட் வகை ப்ளோரோ ரசாயனத்திற்கான சுங்க வரி 5 சதவீதத்தில் இருந்து 2.5 சதவீதமாக குறைக்கப்படுகிறது. எபிகொலோர்திடின் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் கச்சா கிளிசரின் மீதான சுங்கவரி 7.5 சதவீதத்தில் இருந்து 2.5 சதவீதமாக குறைக்கப்படும்.

கடல்சார் பொருட்கள்

125. கடந்த நிதியாண்டில் கடல்சார் பொருட்கள் அதிகளவு ஏற்றுமதி செய்யப்பட்டு நாட்டின் கடலோர மாநிலங்களின் விவசாயிகள் பயனடைந்தனர். கடல் சார் பொருட்களின் ஏற்றுமதியை மேலும் அதிகரிக்க இறால் தீவனத்திற்கான வரி குறைக்கப்படுகிறது.

வைர ஆய்வகம்

126. இயற்கை வைரங்களை வெட்டுதல் மற்றும் பட்டை தீட்டுதலில் இந்தியா முன்னணி வகிக்கிறது. உலகளாவிய மொத்த விற்பனை மதிப்பில் நான்கில் மூன்று பகுதி பங்களிப்பை கொண்டுள்ளது. இயற்கை வைரங்களின் சேமிப்பு குறைவால் இத்தொழில்துறை ஆய்வகத்தில் உருவாக்கப்படும் வைரங்கள் என்ற முறையை நோக்கி செல்கிறது. அந்த உற்பத்தியில் பயன்படுத்தப்படும் பொருட்களுக்கான அடிப்படை சுங்க வரியை குறைக்க நான் பரிந்துரைக்கிறேன்.

மதிப்புமிக்க பொருட்கள்

127. நடப்பு நிதியாண்டின் தொடக்கத்தில் தங்கம் மற்றும் பிளாட்டின கட்டிகள் மீதான சுங்கவரி அதிகரிக்கப்பட்டது. அப்பொருட்களில் இருந்து தயாரிக்கப்படும் ஆபரணங்கள் மீது வரியை அதிகரிக்க நான் தற்போது பரிந்துரைக்கிறேன். இறக்குமதி செய்யப்படும் வெள்ளி கட்டிகள் மற்றும் ஆபரணங்கள் மீதான வரியையும் அதிகரிக்க நான் பரிந்துரைக்கிறேன்.

உலோகங்கள்

128. சிஆர்ஜிஓ எஃகு, நிக்கல் கேத்தோட் உற்பத்திக்காக எஃகு துறைக்கு ஆதாரப் பொருட்கள் எளிதில் கிடைக்கும் வகையில் அதன்மீதான அடிப்படை சுங்க வரி விலக்கப்படுகிறது.

129. அதே போல் இரண்டாம் நிலை தாமிரம் உற்பத்தியாளர்களுக்கான ஆதாரப் பொருட்கள் எளிதில் கிடைப்பதை உறுதி செய்ய அதன் மீதான அடிப்படை சுங்க வரி 2.5 சதவீதமாக தொடரும்.

130. லேடெக்ஸ் வகை அல்லாத மற்ற இயற்கை வகை ரப்பர் கலவை மீதான அடிப்படை சுங்கவரி 10 சதவீதத்தில் இருந்து 20 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது. அல்லது கிலோ ஒன்றுக்கு 30 ரூபாய் என்ற அளவில் இரண்டில் எது குறைவோ அது கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

சிகரெட்டுகள்

131. குறிப்பிட்ட சிகரெட்டுகளுக்கான தேசிய பேரிடர் ஒருங்கிணைப்பு வரி 3 ஆண்டுகளுக்கு முன்பு திருத்தி அமைக்கப்பட்டது. 16 சதவீதம் அளவிற்கு அதிகரித்து திருத்தி அமைக்க பரிந்துரைத்துள்ளது.

நேரடி வரிகள்

132. நான் தற்போது நேரடி வரி பரிந்துரைகளுக்கு வருகிறேன். தொடர்ச்சியான நிலையான வரி விதிப்பை பராமரிக்க சிரமங்களை குறைக்க பல்வேறு விதிமுறைகளை மேலும் எளிமைப்படுத்த தொழில்முனைவோரை ஊக்கப்படுத்த குடிமக்களுக்கு வரி நிவாரணம் அளிக்க இந்த பரிந்துரைகள் நோக்கமாக கொண்டுள்ளது.

133. வரி இணக்கங்களை எளிதாக்கியதன் மூலம் வரி செலுத்துவோருக்கான சேவையை வருமான வரித்துறை மேம்படுத்தியுள்ளது. நமது வரி செலுத்துவோருக்கான இணைய தளத்தில் நாள்தோறும் அதிகபட்சமாக 72 லட்சம் வருமான வரி தாக்கல் செய்யப்படுகிறது. இந்த ஆண்டு மேலும் 6.5 கோடி வருமான வரி தாக்கல் செய்யப்பட்டது; அதனை பரிசீலிக்கும் காலம் 2013-14-ம் நிதியாண்டில் சராசரியாக 93 நாட்களாக இருந்த நிலையில், தற்போது 16 நாட்களாக குறைக்கப்பட்டுள்ளது; 24 மணி நேரத்திற்குள் 45 சதவீத வருமான வரி தாக்கல் கணக்குகள் பரிசீலிக்கப்பட்டன. இதனை மேலும் மேம்பட செய்ய நாங்கள் விரும்புகிறோம். வரி செலுத்துவோர் வசதிக்காக பொதுவான வருமான வரி

கணக்கு தாக்கல் படிவம் அறிமுகம் செய்யப்படுகிறது. குறைதீர்ப்பு பிரிவை மேலும் வலுப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் தொழில் துறையினர்

134. நமது பொருளாதாரத்தின் வளர்ச்சி எந்திரங்களாக சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் செயல்படுகின்றன. 2 கோடி ரூபாய் அளவிற்கு விற்று முதலை கொள்ளும் பேரியல் தொழில் நிறுவனம் 50 லட்சம் அளவிற்கு விற்று முதல்களை கொண்டுள்ள குறிப்பிட்ட தொழில் நிறுவனங்கள் அனுமான வரியின் பயனைப் பெற முடியும். 5 சதவீதத்திற்கும் மேல் அல்லாத ரொக்க வரவுகளை கொண்டுள்ள வரி செலுத்துவோருக்கான வரைமுறையை முறையே 3 கோடி ரூபாய், 75 லட்சம் ரூபாய் என நான் பரிந்துரைக்கிறேன்.

ஒத்துழைப்பு

135. ஒத்துழைப்பின் மதிப்பு போற்றப்படக் கூடியது. நமது பிரதமரின் ஒத்துழைப்பின் மூலம் செழிப்பு என்ற நோக்கத்தை அடைய அமிர்த காலத்தில் ஒத்துழைப்பின் முயற்சியை இணைத்தல் என்ற அவருடைய தீர்மானத்திற்காக பகுதி ஆ-வில் கூடுதலாக நடைமுறைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. கூட்டுறவு துறைக்கான பரிந்துரைகள் என்னிடம் உள்ளன.

136. முதலில் 31.03.2024 வரை தொடங்கப்படும் புதிய கூட்டுறவு துறைகள் குறைந்தபட்ச வரி விதிப்பான 15 சதவீதம் வரியின் பயனை அடையும். தற்போது இது புதிய உற்பத்தி நிறுவனங்களுக்கு கிடைக்கும்.

137. இரண்டாவதாக 2016-2017 மதிப்பீட்டு ஆண்டுக்கு முன்பு கரும்பு விவசாயிகளுக்கு தொகை செலுத்தப்பட்டிருந்தால் அதை செலவினமாக எடுத்துக்கொள்ள சர்க்கரை கூட்டுறவு சங்கங்களுக்கு வாய்ப்பு வழங்க நான் பரிந்துரைக்கிறேன். இதன் மூலம் சுமார் 10,000 கோடி ரூபாய் அளவிற்கு அவர்களுக்கு நிவாரணம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

138. மூன்றாவதாக தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள், ஆரம்ப கூட்டுறவு வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை வங்கிகளில் உறுப்பினர் ரொக்கமாக வைப்புத் தொகை அளிக்க அல்லது கடன் வாங்க அதிகபட்ச தொகை 2 லட்சம் ரூபாயாக நான் அனுமதிக்கிறேன்.

139. அதே போல் கூட்டுறவு சங்கங்களுக்கு வருமான வரி பிடித்தத்தில் இருந்து தொகையை திரும்ப பெறுவதற்கான அதிகபட்ச வரைமுறை 3 கோடி ரூபாயாகும்.

ஸ்டார்டப் நிறுவனங்கள்

140. தொழில் முனைவோர் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்கு வகிக்கின்றன. ஸ்டார்டப் நிறுவனங்களுக்காக பல்வேறு நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு வருகிறோம். உலகளவில் ஸ்டார்டப் சூழலில் இந்தியா 3-ம் இடம் வகிக்கிறது. நடுத்தர வருமானம் உள்ள நாடுகளுக்கிடையே புதுமை கண்டுபிடிப்புகள் தரத்தில் 2-ம் வரிசையில் உள்ளது. ஸ்டார்டப் நிறுவனங்கள் வருமான வரியின் பயனை அடைவதற்கான காலக்கெடுவை 31-3-23-ல் இருந்து 31-3-24 வரை அதிகரிக்க நான் பரிந்துரைக்கிறேன். ஸ்டார்டப் நிறுவனங்களுக்கான நட்டத்தின் கணக்குகளை ஈடு செய்வதற்கு 7 வருடத்தில் இருந்து 10 வருடங்களாக எடுத்து செல்ல நான் மேலும் பரிந்துரைக்கிறேன்.

முறையீடுகள்

141. ஆணையர் நிலையில் உள்ள நிலுவையில் இருக்கும் முறையீடுகளை குறைக்க சிறிய முறையீடுகளுக்கு தீர்வு காண சுமார் 100 இணைய ஆணையர்களுக்கு பணியில் அமர்த்த நான் பரிந்துரைக்கிறேன்.

வரிச்சலுகைகளின் சிறந்த இலக்குகள்

142. 54 மற்றும் 54F பிரிவுகளின் கீழ் குடியிருப்பு வீடுகளில் முதலீட்டின் மீதான மூலதன ஆதாயத்திலிருந்து 10 கோடி வரை விலக்கு அளிக்க நான் முன்மொழிகிறேன். இதேபோன்ற நோக்கத்துடன் கூடிய மற்றொரு திட்டம், மிக அதிக மதிப்புள்ள

காப்பீட்டு பாலிசிகளின் வருமானத்திலிருந்து வருமான வரி விலக்கு வரம்பாகும்.

முறைப்படுத்துதல்

143. முறைப்படுத்துதல் மற்றும் எளிமைப்படுத்துதல் தொடர்பாக ஏராளமான பரிந்துரைகள் உள்ளன. பெருநகரங்கள், நகரங்கள், கிராமங்களின் வளர்ச்சி மற்றும் முறைப்படுத்துதல், வீடுகள் ஆகியவற்றுக்கான மாநில அல்லது யூனியன் பிரதேச அரசுகளால் அமைக்கப்பட்ட ஆணையங்கள், கழகங்கள் ஆகியவற்றின் வருமானத்திற்கு வருமான வரியில் இருந்து விலக்கு அளிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இந்த வரிசையில் மேற்கொள்ளப்படும் பெரிய நடைமுறைகள்:

- ஆன்லைன் விளையாட்டுகளுக்கான ரூ.10,000 குறைந்தபட்ச வரி பிடித்தத்திற்கான வரம்பு நீக்கம்
- தங்கத்தை தங்க பத்திரமாக மாற்றும் போது ஏற்படும் முதலீட்டு ஆதாயம் வருவாயாக பரிசீலிக்கப்படாது
- தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியை திரும்ப பெறும் போது நிரந்தர கணக்கு எண் இல்லாத சந்தாதாரர்களுக்கான வரி பிடித்தம் 30 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாக குறைக்கப்படுகிறது.
- சந்தை தொடர்புடைய கடன் பத்திரங்களுக்கான வருவாயின் வரி விகிதங்கள்

மற்றவை

144. நிதி மசோதாவில் உள்ள பெரிய பரிந்துரைகள்

- ஐஎப்எஸ்சி, ஜிஐஎப்டி நகரத்திற்கு மாற்றப்படும் நிதிகளுக்கு வரிச் சலுகைகளின் காலம் 31.03.2025 வரை நீட்டிப்பு;
- வருமான வரி சட்டத்தின் 276 ஏ பிரிவை குற்றமில்லா செயல்கள் பிரிவாக மாற்றப்படுதல்
- ஐடிபிஐ வங்கி உட்பட பங்கு விலக்கல்லை மேற்கொள்ள அனுமதிக்கப்படும்.
- அக்னி வீரர் நிதிக்கு முழு வரி விலக்கு

தனிநபர் வருமான வரி

145. நான் தற்போது அனைவரும் எதிர்பார்க்கும் தனிநபர் வருமான வரிக்கு வருகிறேன். இதில் 5 முக்கிய அறிவிப்புகள் உள்ளன. இதில் முக்கியமாக பயனடைபவர்கள் கடினமாக உழைக்கக்கூடிய நடுத்தர வகுப்பினர்.

146. முதலாவதாக தள்ளுபடி தற்போது 5 லட்சம் ரூபாய் வரையிலான வருமானம் உள்ளவர்கள் பழைய மற்றும் புதிய வரி கட்டமைப்பின் படி வரி செலுத்த வேண்டியதில்லை. புதிய வரி கட்டமைப்பின் படி இதனை 7 லட்சம் ரூபாயாக அதிகரிப்பதற்கு நான் பரிந்துரைக்கிறேன். இதன் மூலம் 7 லட்சம் ரூபாய் வரை வருவாய் உடையவர்கள் எந்த வரியும் செலுத்த வேண்டியதில்லை.

147. இரண்டாவது பரிந்துரை நடுத்தர வகுப்பைச் சேர்ந்த தனி நபர்களுக்கானது. கடந்த 2020-ம் ஆண்டில் 2.5 லட்சம் ரூபாயில் இருந்து 6 வகையான வருவாய் பிரிவுகளாக புதிய தனி நபர் வருமான வரி கட்டமைப்பை நான் அறிமுகம் செய்தேன். இந்த கட்டமைப்பு எண்ணிக்கையை 5 ஆக குறைத்து வரி விலக்கு தொகையை 3 லட்சம் ரூபாயாக அதிகரிக்க நான் பரிந்துரைக்கிறேன். புதிய வரி விகிதங்கள் :

ரூ.0-3 லட்சம்- வரி இல்லை
ரூ.3-6 லட்சம்- 5 சதவீதம்
ரூ.6-9 லட்சம்- 10 சதவீதம்
ரூ.9-12 லட்சம்- 15 சதவீதம்
ரூ.12-15 லட்சம்- 20 சதவீதம்
15 லட்சம் ரூபாய்க்கும் மேல் - 30 சதவீதம்

148. புதிய வரி கட்டமைப்பு அனைத்து வரி செலுத்துவோருக்கும் பெரிய நிவாரணத்தை அளிக்கும்
ஆண்டிற்கு 9 லட்சம்ரூபாய் வருவாய் ஈட்டும் தனிநபர் 45 ஆயிரம் ரூபாயை மட்டும் வரி செலுத்தவேண்டியிருக்கும். இது அவருடைய வருமானத்தில் 5 சதவீதமாகும். இது தற்போது அவர்கள் செலுத்த வேண்டியதில் 25 சதவீதம் குறைவாகும். அதாவது 60,000 ரூபாய். அதே போல் 15 லட்சம் ரூபாய் வருவாய் ஈட்டும் தனிநபர் ரூ.1.5 லட்சம் வரி செலுத்த வேண்டியிருக்கும். அல்லது அவருடைய வருமானத்தில் 10

சதவீதம் தற்போது செலுத்த வேண்டிய ரூ. 1,87,500-ல் 20 சதவீதம் குறைவாகும்.

149. எனது 3-வது பரிந்துரை, சம்பளதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் உட்பட ஓய்வூதியதாரர்களுக்கானது. 15.5 லட்சம் ரூபாய் அதற்கு மேல் வருவாய் உள்ள ஒவ்வொரு சம்பளதாரரும் இதன் மூலம் 52,500 ரூபாய் அளவிற்கு பயனடைவார்கள்.

150. எனது நான்காவது அறிவிப்பு, நாட்டின் அதிகபட்ச வரி விகிதமான 42. 74 சதவீதம் தொடர்புடையது. இது உலகிலேயே அதிகபட்சமாகும். புதிய வரி கட்டமைப்பில் கூடுதல் வரி விகிதம் 37 சதவீதத்தில் இருந்து 25 சதவீதமாக குறைக்க நான் பரிந்துரைக்கிறேன். இதன் மூலம் அதிக பட்ச வரி விகிதம் 39 சதவீதமாக குறையும்.

151. கடைசியாக, மாத அடிப்படை அதிகபட்ச சம்பளம் ரூ.30,000 இருந்த போது, சம்பளம் பெற்ற அரசு சாரா ஊழியர்களுக்கு ஓய்வு பெறும்போது விடுப்பு பணப்பட்டுவாடா மீதான வரி விலக்குக்கான வரம்பு ரூ.3 லட்சமாக 2002-ம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டது. அரசு சம்பளம் அதிகரித்துள்ள நிலையில், அதன் வரைமுறை 25 லட்சம் ரூபாயாக அதிகரிக்க நான் பரிந்துரைக்கிறேன்.

152. நாங்கள் புதிய வருமான வரி முறையை இயல்பான வரி கட்டமைப்பாக உருவாக்கியிருக்கிறோம். எனினும் குடிமக்கள் பழைய வரி கட்டமைப்பின் பயன்களை பெறுவதற்கான வாய்ப்பு தொடர்ந்து கிடைக்கும்.

153. இதற்கு அப்பால் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் சில மாற்றங்களை நான் செய்துள்ளேன்.

154. இந்த பரிந்துரைகளின் விளைவாக சுமார் 38,000 கோடி ரூபாய் வருவாயில் 37,000 கோடி ரூபாய் நேரடி வரிகளிலும், 1000 கோடி ரூபாய் மறைமுக வரிகளிலும் தள்ளுபடி செய்யப்படும். சுமார் 3000 கோடி ரூபாய் அளவிற்கு வருவாய் ஈட்டப்படும். இதன் மூலம் மொத்த வருவாயில் ஆண்டிற்கு 35,000 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்படும்.

155. மக்களவை தலைவர் அவர்களே, இந்த வார்த்தைகளுடன் நான் எனது பட்ஜெட்டை இந்த மதிப்புமிக்க அவையில் சமர்ப்பிக்கிறேன்.

## மத்திய பட்ஜெட் 2023-24 ன் பிரிவு 2க்கான இணைப்பு

**நேரடி வரிவிதிப்பு தொடர்பான திருத்தங்கள்:**

**புதிய தனிநபர் வருமான வரி நடவடிக்கையில் வழங்கப்படும் வரி நிவாரணம்:**

A.1 நிதி சட்டம் 2020ன் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட தனிநபர் மற்றும் இந்து கூட்டுக் குடும்பங்களுக்கான புதிய வரி விதிப்பு நடவடிக்கைகள் தான் நிலையான வரி விதிப்பு நடைமுறையாக இருப்பதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

A.2 தனிநபர்களுக்கான அமைப்பு, தனிநபர்கள் அனைவருக்குமான அமைப்பு, வரி செலுத்துவோர் எந்த விதமான பிரிவின் கீழும் வகைப்படாமல் தனிநபராக ஏற்கப்படும் அமைப்பு போன்றவற்றிற்கும் இதுவே நடைமுறையாக இருக்கும்.

A.3 எந்த ஒரு தனிநபரும், இந்து கூட்டுக் குடும்பங்கள், தனிநபர்களுக்கான அமைப்பு, தனிநபர்கள் அனைவருக்குமான அமைப்பு, வரி செலுத்துவோர் எந்த விதமான பிரிவின் கீழும் வகைப்படாமல் தனிநபராக ஏற்கப்படும் அமைப்புகளும் புதிய வரி விதிப்பு நடவடிக்கைகளை ஏற்காமல் பழைய வரி விதிப்பு நடவடிக்கையை தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.தலைமையின் கீழ் வர்த்தகம் அல்லது தொழில்துறையின் மூலம் பெறப்படும் இலாப - நஷ்ட கணக்கு வழக்குகளில் இருந்து பெறப்படும் வருவாயைப் பெறுபவர்கள் பழைய வரி விதிப்பு நடவடிக்கைகளை தேர்ந்தெடுக்கும் பட்சத்தில் ஒரே ஒரு முறை மட்டுமே அந்த வாய்ப்பை பயன்படுத்த முடியும். அதற்குப் பின்னர் புதிய வரிவிதிப்பு நடவடிக்கைகளைத் தான் தொடர்ந்து பின்பற்ற முடியும். தலைமையின் கீழ் வர்த்தகம் அல்லது தொழில்துறையின் மூலம் பெறப்படும் இலாப - நஷ்ட கணக்கு வழக்குகளில் இருந்து பெறப்படும் வருவாயைப் பெறாதவர்கள் பழைய வரி விதிப்பு நடவடிக்கைகளை ஒவ்வொரு ஆண்டும் தேர்ந்தெடுக்க முடியும்.

A.4 புதிய வரி விதிப்பு நடவடிக்கைகளை புதிய படிநிலைகள் மற்றும் வரி விகிதாச்சாரங்கள் போன்றவற்றிற்கு கணிசமான நிவாரணம் வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

| மொத்த வருவாய்(Rs.) | விகிதாச்சாரம் (சதவீதம்) |
|---|---|
| 3,00,000 வரையில் | இல்லை |
| 3,00,001 லிருந்து 6,00,000 வரை | 5 |
| 6,00,001 லிருந்து 9,00,000 வரை | 10 |
| 9,00,001 லிருந்து 12,00,000 வரை | 15 |
| 12,00,001 லிருந்து 15,00,000 வரை | 20 |
| 15,00,000 க்கு மேல் | 30 |

A.5 பழைய மற்றும் புதிய வரிவிதிப்பு நடவடிக்கைகளின் கீழ் குடியுரிமை பெற்ற தனிநபர் 5 இலட்சம் ரூபாய் வரையில் மொத்த வருவாயை பெறுபவர்கள் வரி தள்ளுபடியின் கீழ் எந்த வரியையும் செலுத்தத் தேவையில்லை. புதிய வரி விதிப்பு நடவடிக்கையின் கீழ் குடியுரிமைப் பெற்ற தனிநபர்களுக்கு வரித் தள்ளுபடி அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் அவர்களது மொத்த வருமானம் 7 இலட்சம் ரூபாய் வரை அமையப் பெற்றவர்கள் வரி செலுத்தத் தேவையில்லை.

A.6 சம்பளம் பெறும் தனிநபர்களுக்கான நிலையான தள்ளுபடி 50,000 ரூபாய், குடும்ப ஓய்வூதியம் 15,000 ரூபாய் பெறுபவர்களுக்கான நிலையான தள்ளுபடி போன்ற படிநிலைகளின் கீழ் வருபவர்கள் பழைய வரி விதிப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த இரண்டுப் பிரிவுகளையும் புதிய வரிவிதிப்பு நடவடிக்கைகளின் கீழ் கொண்டுவர முடிவு செய்யப்பட்டுள்ளது.

A.7 பழைய மற்றும் புதிய வரி விதிப்பு நடவடிக்கைகளில் வருமான வரித் தொடர்பான கூடுதல் வரி விதிப்பு 50,00,000 ரூபாயில் இருந்து 1 கோடி ரூபாய் வரை வருவாளை பெறுபவர்களுக்கு 10 சதவீதமும், 1 கோடி ரூபாயில் இருந்து 2 கோடி ரூபாய் வரை 15 சதவீதமும், 2 கோடி ரூபாயில் இருந்து 5 கோடி ரூபாய் வரை 25 சதவீதமும், 5 கோடி ரூபாய்க்கு மேல் 35 சதவீதமும் அளிக்கப்படும். தனிநபர்கள், இந்து கூட்டுக் குடும்பம், தனிநபர்களுக்கான அமைப்பு, தனிநபர்கள் அனைவருக்குமான அமைப்பு, வரி செலுத்துவோர் எந்த விதமான பிரிவின் கீழும் வகைப்படாமல் தனிநபராக ஏற்கப்படும் அமைப்புகளுக்கு புதிய வரி விதிப்பு நடவடிக்கைகளின் கீழ் ஒரே அளவிலான கூடுதல் மற்றும் பெறப்படும். ஆனால் 37 சதவீத கூடுதல் வட்டி விகிதாசாரத்தின் கீழ் வருபவர்களுக்கு இது பொருந்தாது. 2 கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் பெறுபவர்களுக்கு உட்சபட்சமாக 25 சதவீதம் கூடுதல் வட்டிப் பெறப்படும். இதன் மூலம் அதிகபட்ச விகிதாசாரமான 42.7 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாக குறையும். பழைய வரி விதிப்பு நடவடிக்கைகளை தேர்ந்தெடுப்பவர்களுக்கு கூடுதல் வட்டி விகிதாசாரங்களில் மாற்றமில்லை.

A.8 மத்திய, மாநில அரசுகள் துறை சாராத பணியாளர்கள் ஓய்வு பெறும் காலத்தில் வருமான வரிச் சட்டப்பிரிவு 10ல் உட்பிரிவு 10AA துணை விதி (ii) கீழ் சராசரியாக சம்பளம் பெறுபவர்கள் 10 மாதங்களுக்கு சம்பளத்துடன் கூடிய விடுப்பு எடுத்து அதனை பணமாக திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். இதில் அதிகபட்சமாக 3 இலட்சம் ரூபாய் வரையில் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்த உச்சவரம்பை 25 இலட்சம் ரூபாய் வரை நீட்டிக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

*B. சமூக - பொருளாதார நல்வாழ்வு நடவடிக்கைகள்*

**B.1 குறு மற்றும் சிறு தொழில்துறை நிறுவனங்களுக்கு உரிய நேரத்தில் பணப்பட்டுவாடா வழங்கும் நடைமுறைகளை ஊக்குவித்தல்**

குறு மற்றும் சிறு தொழில்துறை நிறுவனங்களுக்கு உரிய நேரத்தில் பணப்பட்டுவாடா வழங்கும் நடைமுறைகளை ஊக்குவிப்பதற்காக இந்த சட்டத்தின் பிரிவு 43Bன் கீழ் பணப்பட்டுவாடா நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது. பணம் செலுத்தப்பட்டப் பிறகே இது சம்மந்தமான பணப்பட்டுவாடா

நடவடிக்கைகளுக்கு அனுமதி அளிக்கப்படும். குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை மேம்பாட்டுச் சட்டத்தின் கீழ் பணம் செலுத்தப்படும் நடவடிக்கை பயனுள்ள முறையில் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

**B.2 அக்னிபாத் திட்டம் 2022**

மூலதனம் அக்னிபாத் திட்டம் 2022ன் கீழ் அக்னிவீர் மூலதன நிதி மூலம் செலுத்தப்படும் பணத்திற்கு விலக்கு அளிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. சேவா நிதி கணக்கில் மத்திய அரசு அல்லது ஆயுதப் படையில் சிறப்புப் பதவியில் இருப்பவர்களின் பங்களிப்பின் மூலம் மொத்த வருவாயை கணக்கீட்டு செய்து தள்ளுபடி செய்யப்படும்.

## B.3 முந்தையகால தேவையை கருத்தில் கொண்டு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு நிவாரணம்:

கடந்த 2016-17 காலகட்டத்திற்கு முன்பு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் சர்க்கரை வாங்குவது தொடர்பான செலவீன நடவடிக்கைகளுக்கு தள்ளுபடி செய்ய வேண்டி கோரிக்கை விடப்பட்ட நிலையில் இருந்தால் அது சம்மந்தமான விண்ணப்பத்தை மதிப்பீடு செய்வதற்கு அதிகாரிகளிடம் அனுப்பப்படும். அந்த அதிகாரி கடந்த ஆண்டில் அரசு ஒப்புதல் அளித்த நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு ஏற்றவாறு தள்ளுபடி செய்வதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்வார்.

## B.4 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் வருமானவரி பிடித்தமில்லாத வகையில் பணத்தை திரும்பப் பெறுவதற்கான ஆரம்ப வரையை உயர்த்துதல்:

வருமானவரி பிடித்தமில்லாத வகையில் பணத்தை திரும்பப் பெற கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு ஒரு ஆண்டில் ரூ.3 கோடி வரை திரும்பப் பெறுவதற்கு ஏதுவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## B.5 தொடக்க கூட்டுறவு ஆலைகளுக்கு ரொக்க கடன் - பரிவர்த்தனைகள் தொடர்பான அபராதம்:

தொடக்க வேளாண் கடன் வழங்கும் சங்கம் அல்லது தொடக்க கூட்டுறவு வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கி மூலமாக ஏற்கப்படும் வைப்புநிதி தொடர்பான சட்டப்பிரிவு 269SS-ஐ பிரிவை திருத்துவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ரூ.2 இலட்சத்திற்கும் குறைவாக கடனோ அல்லது வைப்புத்தொகை தொடர்பான சட்ட ரீதியிலான பிரச்சனைகள் கிடையாது. தொடக்க வேளாண் கடன் வழங்கும் சங்கம் அல்லது தொடக்க கூட்டுறவு வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கி மூலமாக ரூ.2 இலட்சத்திற்கும் குறைவான பெறப்பட்ட கடனை திரும்ப அளிக்கும்போதோ அல்லது வைப்புத்தொகையை பணமாக வழங்கும்போது சட்டரீதியிலான பிரச்சனை கிடையாது.

## B.6 நஷ்டங்களோடு தொடர்ந்து செயல்படும் மற்றும் அதற்கான தீர்வுகளை காணும் ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு நிவாரணம்:

51 சதவீத முதலீட்டுப் பங்கு தொடர்பாக நஷ்டத்தில் தொடர்ந்து இயங்கும் ஸ்டார்ட் அப் நிறுவனங்களின் பங்குதாரர்கள் தொடர்ந்து தங்களது பங்குகளை வைத்திருக்கும் நிறுவனங்களுக்கு நிவாரணம் அளிக்கப்படும். தற்போது இந்த சலுகையானது ஒரு ஸ்டார்ட் அப் நிறுவனம் தொடங்கப்பட்டு 7 ஆண்டு காலகட்டத்தில் இந்த வகையிலான நஷ்டம் ஏற்பட்டால் அதற்கு சலுகை வழங்கும் வசதி நடைமுறையில் உள்ளது. அதனை 10 ஆண்டுகளுக்கு நீட்டிப்பு செய்வதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

## B.7 இந்த விதிவிலக்கைப் பெற தகுதியுள்ள ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு தேதி நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது:

இந்தாண்டு ஏப்ரல் 1ம் தேதிக்கு முந்தைய காலகட்டத்தில் தொடங்கப்படும் குறிப்பிட்ட ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு சில வகையிலான வரி நிவாரணம் பெறுவதற்கு தகுதியானவை ஆகும். இதனை அடுத்த ஆண்டு ஏப்ரல் 1ம் தேதி வரை நீட்டிப்பு செய்யப்படும்.

## B.8 தங்கம் மற்றும் மின்னணு தங்க ரசீது:

தங்கத்தை மின்னணு வகையில் மாற்றம் அல்லது மின்னணு வகையில் இருந்து தங்கமாக மாற்றம் செய்யும் பரிமாற்ற நடவடிக்கைகள் மூலதன ஆதாயத்திற்காக மேற்கொள்ளப்பட்டதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. மின்னணு வகையில் தங்கத்தை கையிருப்பு வைப்பது தொடர்பான முதலீடுகளை இத்தகைய நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும்.

### B.9 இந்திய நிதி அமைப்பு குறியீடுக்கு ஊக்கத்தொகை:

இந்தாண்டு மார்ச் 31ம் தேதிக்கு முந்தைய காலகட்டத்தில் இந்திய நிதி அமைப்பு குறியீட்டுக்கு மடைமாற்றம் செய்யப்பட்ட நிதி ஆதாரங்களுக்கு குறிப்பிட்ட வரிவிலக்கு சலுகைகள் இருந்து வருகிறது. அதனை வரும் 2025 ம் ஆண்டு மார்ச் 31ம் தேதி வரையில் நீட்டிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டில் பதிவு செய்யப்பட்ட சில குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு விதிமுறைகளுக்கு உட்பட்ட விலக்கு அளிக்கப்படும்.

### B.10 மேம்பாட்டு ஆணையங்களுக்கு விலக்கு:

மத்திய,மாநில அரசுகளின் அதிகார வரம்புகளுக்கு உட்பட்ட சட்ட திட்டங்களுக்கு ஏற்ப, வணிக ரீதியிலான பலன்களை பெறும் வீட்டுவசதி, திட்டமிடல், நகர்புற மற்றும் ஊரக மேம்பாட்டு தொடர்பான நடவடிக்கைகள் மூலம் பெறப்படும் நிதி ஆதாரங்களுக்கு விலக்கு அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

### B.11 பங்குகளை குறைப்பது தொடர்பான குறிப்பிட்ட நடவடிக்கைகளுக்கு ஆதரவு:

ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கி நடவடிக்கைகளில் நஷ்டங்கள் அதிகமாகும் போது அதனை ஒன்றிணைப்பதற்காக பங்குகளை குறைப்பதற்கு ஏதுவான செயல்பாடுகளை மேற்கொள்வதற்கு ஊக்குவிப்பு அளிக்கப்படும். அதிலும் குறிப்பாக இராஜ்ஜிய ரீதியிலான பங்குகளை குறைக்கப் பெற்று ஐந்தாண்டுகளுக்குள் ஒன்றிணைப்பு நடவடிக்கைகள் நடைபெற வேண்டியது அவசியமானது. மேலும் இராஜ்ஜிய ரீதியிலான பங்குகளை குறைக்கும் நடவடிக்கையின் வரையறையில் மாற்றம் செய்வதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

### B.12 உற்பத்தித் துறையில் புதிதாக தொடங்கப்படும் கூட்டுறவு சங்கத்தின் வளர்ச்சியை மேம்படுத்த 15 சதவீத சலுகை வரி:

உற்பத்தித் துறையில் புதிதாக தொடங்கப்படும் கூட்டுறவு சங்கத்தின் வளர்ச்சியை மேம்படுத்த இந்தாண்டு ஏப்ரல் 1ம் தேதிக்கு முன்பாகவோ அல்லது பின்பாகவோ தொடங்கப்படும் புதிய கூட்டுறவு சங்கம், அதன் உற்பத்தி மற்றும் தயாரிப்பு பணிகளை வரும் 2024ம் ஆண்டு மார்ச் 31ம் தேதிக்குள் தொடங்கியிருக்கும் பட்சத்தில் எந்தவித ஊக்கத்தொகை அல்லது விலக்கு பெறுவதற்கு முடியாது. இதனைத் தவிர்த்து உற்பத்தி துறையில் புதிதாக தொடங்கப்படும் கூட்டுறவு சங்கத்தின் வளர்ச்சியை மேம்படுத்த 15 சதவீத சலுகை வரி பெற முடியும்.

## C. இணக்கச்சுமையை எளிதாக்கும் நடவடிக்கை:

### C.1 ஆரம்பகட்ட செலவீனங்கள் தொடர்பாக தள்ளுபடி பெறும் நடவடிக்கையை எளிதாக்குதல்:

தற்போது குறிப்பிட்ட நிலைகளில் ஆரம்பகட்ட செலவீனங்களை பெறுவதற்கு வரி செலுத்துவோர் அல்லது ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பு மூலமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேலும், இந்த செலவீனங்கள் தொடர்பான நடவடிக்கைகளை நீக்குவது தொடர்பாக ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது. இது

போன்ற செலவீனங்களை குறிப்பிடப்பட்டுள்ள அமைப்பில் வரி செலுத்துவோர் தெளிவாக விளக்க வேண்டும்.

### C.2 அனுமான அடிப்படையிலான வருமான வரித்திட்டத்தில் உச்சவரம்பு அதிகரிப்பு:

இணக்கச் சுமையை குறைப்பதற்கும், ரொக்க வடிவில் அல்லாத பணப்பரிமாற்ற நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காகவும் 2 கோடி ரூபாய் முதல் 3 கோடி ரூபாய் வரையிலான வர்த்தக நடவடிக்கைகளை கொண்ட நிறுவனங்களுக்கு, அனுமான அடிப்படையிலான வருமான வரித்திட்டத்தில் உச்சவரம்பை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்த வருட காலகட்டத்தில் ரொக்கமாக பெறப்பட்டுள்ள தொகைக்கு மொத்தமாக பெறப்பட்ட நிதி ஆதாரத்தில் 5 சதவீதத்திற்கு அதிகமில்லாத உச்சவரம்பிற்கு பொருந்தும்.

### C.3 குறைந்த அளவில் அல்லது முற்றிலுமாக வரி தள்ளுபடி பெறும் வாய்ப்புகள் தொடர்பான நடவடிக்கை விரிவாக்கம்:

வரி செலுத்துபவர் குறைந்த அளவில் அல்லது முற்றிலுமாக வரி தள்ளுபடி பெறும் வாய்ப்புகளை பெறுவதற்கு சான்றிதழை பெற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வர்த்தக அறக்கட்டளைகள் மூலம் அந்த சட்டத்தின் கீழ் பிரிவு 194LBA ன் படி வரி தள்ளுபடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### D. விரிவுபடுத்தப்பட்ட, மேம்படுத்தப்பட்ட வரி ஆதாரம் மற்றும் எதிர்ப்பை தவிர்த்தல்:

D.1 குடியுரிமை பெற்றவர்களிடமிருந்து 50,000 ரூபாய்க்கு அதிகமாக இல்லாத ரொக்கத்திற்கு வரவேண்டிய வருவாய் தொடர்பான நடவடிக்கைகளுக்கு நீட்டிப்பு செய்யும் முடிவை இந்தாண்டு ஏப்ரல் 1ம் தேதி முதல் நடைமுறைப்படுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது.

D.2 இந்தியாவில் செய்தி சேகரிப்பு மற்றும் விநியோகம் செய்வது தொடர்பான முகமைகளுக்கு 2023-24 நிதியாண்டிலிருந்து வரிவிலக்கு நடவடிக்கையை நீக்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

D.3 வர்த்தக அறக்கட்டளைகளிலிருந்து பெறப்படும் நிதி ஆதாரத்தை உரிமையாளர்களிடம் அளிக்கப்படுவதற்கு வரி விதிக்கப்படும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தற்போது வர்த்தக அறக்கட்டளை மற்றும் உரிமையாளர் போன்றவைகளுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

D.4 அட்டவணையில் இடம் பெற்றுள்ள கடன் பத்திரங்கள் மீதான வருமானவரி பிடித்தத்திற்கு விலக்கு அளிப்பதை திரும்ப பெறுவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

D.5 இந்தியக் குடியுரிமை பெறாதவர்களுக்கான அனுமானத் திட்டங்களில், கணக்கிடப்பட்ட அனுமான வருவாய் தொடர்பான நடவடிக்கைகளுக்கு ரத்து.

D.6 ஆன்லைன் விளையாட்டுகளில் வருமான வரி பிடித்தம், இணையத்தில் வெற்றி பெற்றவர்களுக்கான வரி விதிப்பு நடவடிக்கைகள் நிதியாண்டின் இறுதியில் திரும்ப பெறப்படும். 10,000 ரூபாய் உச்சவரம்பு அல்லாத நிலையில் வருமான வரி பிடித்தம் செய்யப்படும். லாட்டரி சீட்டு, குறுக்கெழுத்து விளையாட்டுகள் போன்றவற்றிற்கு 10,000 ரூபாய் உச்சவரம்பு அல்லாத நிலையில் வருமான வரி பிடித்தம் செய்யப்படும்.

D.7 7 இலட்சம் ரூபாய்க்கு அதிகமாக கல்வி மற்றும் மருத்துவ சிகிச்சை போன்றவற்றிற்கு வெளிநாட்டிலிருந்து பெறப்படும் நிதி மீதான வரி பிடித்தம் 5 சதவீதமாக தொடர்ந்து இருக்கும். 7 இலட்சம் ரூபாய்க்கு அதிகமாக வெளிநாட்டு நிதி

நிறுவனங்களிலிருந்து கடன் பெறுதல் மீதான வரி பிடித்தம் 0.5 சதவீதமாக தொடர்ந்திருக்கும். சுதந்திரமான வெளிநாட்டு ரொக்கப் பரிமாற்றத் திட்டம், வெளிநாட்டு சுற்றுலா திட்டம் போன்றவற்றிற்கு 5 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாக விகிதாச்சாரங்கள் உயர்த்தப்பட்டுள்ளது.

D.8 வீட்டுவசதி சொத்துகள் தொடர்பான முதலீடுகள் செய்யும்போது மூலதன வருவாய் மீதான வரிச்சுமையை தவிர்க்க முடியும். இதற்கு ரூ.10 கோடி உச்சவரம்பு அளிக்கப்படும்.

D.9 சந்தைப்படுத்துதல் தொடர்பான கடன் பத்திரங்கள் மூலம் தொடர்பான ஏதுவான விகிதாசாரத்தில் குறுகியகால மூலதன வருவாய்க்கு வரிவிதிப்பு செய்யப்படும்.

D.10 இருப்பு கணக்கை குறைந்த மதிப்பீட்டில் எடுத்துக்கொள்வதன் மூலம் நிதி தொடர்பான பிரச்சனைகளை குறைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

D.11 5 இலட்சம் ரூபாய்க்கு மேலாக இந்தாண்டு ஏப்ரல் 1 ம்தேதி அல்லது அதற்கு பிந்தைய காலகட்டங்களில் ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தில் காப்பீட்டு வரி தொகுப்பு, 5 இலட்சம் வரையிலான காப்பீட்டுத் திட்டம் தொடர்பான பெறப்படும் வருவாய்க்கு விலக்கு. ஆயுள் காப்பீடு பெற்ற நபர் இறந்து போனால் இந்த விலக்கு நடவடிக்கை பொருந்தாது. மேலும் இந்தாண்டு மார்ச் 31 தேதி வரையில் பெறப்பட்டுள்ள ஆயுள் காப்பீட்டு திட்டங்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது.

D.12 சொத்து தொடர்பாக கூட்டு நடவடிக்கைகளுக்கு மூலதன வருவாய் கணக்கீடு செய்யும் வசதியில் திருத்தம் செய்யப்பட்டு எவ்வளவு தொகை பெறப்பட்டது என்பதை தெரிவிப்பதற்கு காசோலைகள் போன்றவை ஏற்றுக்கொள்ளப்படும்.

D.13 ஒரு சொத்தை பெறுவதற்கு அல்லது வளர்ச்சி ஏற்படுத்துவதற்கு பெறப்படும் மூலதனத்திற்கு செலுத்தப்பட்ட வட்டி வருவாயிலிருந்து தள்ளுபடி செய்யப்படுவதற்கு அனுமதி பெறலாம். இதன் மூலம் சொத்தை பெறுவதற்கான நிதி அல்லது அதனை சீர் செய்வது தொடர்பான முன்னேற்ற நடவடிக்கைகளில் சேர்ப்பதன் மூலம் மூலதன வருவாய் குறைக்க முடியும். சொத்தை பெறுவதற்கான நிதி அல்லது சீர் செய்வது தொடர்பான முன்னேற்ற நடவடிக்கைகளுக்கு முந்தைய கால தள்ளுபடியில் சேராது.

D.14 கண்ணுக்கு புலப்படாத சொத்துகள் அல்லது உரிமைகள் போன்றவற்றை பெறும்போது கருத்தில் கொள்ள முடியாது. மேலும் அதனை பரிமாற்றம் செய்யும் பொழுது ஆனால் அதனை எதுவுமில்லாத வகையில் கருதப்படும்.

## E. இணக்கசுமை மற்றும் வரி நிர்வாக மேம்பாடு

E.1 இடைக்கால தீர்வு வாரியத்தின் ஆணைகளை திருத்தம் செய்வதற்கு கால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது. அது தொடர்பான விண்ணப்பங்கள் 01.02.2021 வரையிலும் 01.02.2022 முன்னதாகவும் அளிக்கப்பட்ட கால வரம்பு 30.09.2023 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

E.2 ஆணையர் முன்பு நிலுவையில் உள்ள மேல்முறையீடுகளை தீர்க்கும் நடவடிக்கைகளை விரைவாக எடுப்பதற்கு இணை ஆணையர் அந்தஸ்தில் பதவி உருவாக்கப்படும். இது சம்மந்தமாக குறிப்பிட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

E.3 வரி செலுத்துவோர் ஆவணங்கள் மற்றும் தகவல்களை தெரிவிக்க 30 நாட்கள் கால அளவிலிருந்து 10 நாட்கள் குறைக்கப்பட்டுள்ளது.

E.4 மேல்முறையீட்டு தீர்ப்பாணையத்தின் முன்பாக மேல்முறையீட்டு ஆணையர் வழங்கிய அபராதம் தொடர்பான ஆணைகள் மீது மேல்முறையீடு செய்யப்படும். மேலும் இந்த சட்டத்தின் 263 பிரிவின் கீழ் முதன்மை தலைமை ஆணையர் தலைமை ஆணையர் மூலமாக திருத்தம் தொடர்பாக வழங்கப்பட்ட ஆணைகளுக்கு

மேல்முறையீடு செய்யப்படும். பல்வேறு வகையான வழக்குகளுக்கும் மேல்முறையீட்டு தீர்ப்பாணையத்தின் வாயிலாக தீர்வு ஏற்படும்.

E.5 இந்த சட்டத்தின் 132 வது பிரிவை திருத்தம் செய்வது தொடர்பாக தேடுதல் மற்றும் பரிமுதல் நடவடிக்கைகளுக்கு டிஜிட்டல் தடயவியல் நிபுணர்கள் மற்றும் துறை சார்ந்த வல்லுநர்களின் உதவியை பெறுவதற்கு அனுமதி. தேடுதல் நடவடிக்கைகளின் போது வெளியில் தெரிவிக்காத சொத்து தொடர்பான வருவாய்க்கு உதவும் வகையில் செயல்படுத்தப்படும்.

E.6 இந்த சட்டத்தின் கீழ் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு ஏதுவாக நிறுவனத்திலிருந்து பெறப்படும் வருவாய் தொடர்பான நடவடிக்கைகளை கணக்கீடு மற்றும் மறு கணக்கீடு செய்யப்படும்.

E.7 பன்னிரண்டு மாத காலகட்டத்திற்குள் கணக்கீட்டு தொடர்பான ஆணை வழங்கப்படும். இந்த சட்டத்தின் 132 பிரிவின் கீழ் தேடுதல் மற்றும் பறிமுதல் நடவடிக்கைகளுக்கான காலவரம்பு 12 மாதத்திற்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக திருத்தங்கள் செய்வதற்கு மத்திய அரசுக்கு அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளது.

இ- 8

மின்னணு ஆய்வு, தவாதீர்வு, அட்வான்ஸ் விதிகள், மேல்முறையீடு மற்றும் அபராதம் தொடர்பாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்களில் எந்த நேரமும் சிறந்த செயல்பாட்டுக்கு, மத்திய அரசுக்கு அதிகாரம் வழங்கும் வகையில் திருத்தங்களை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இ-9

மறுமதிப்பீட்டுக்கான ரிட்டன் தாக்கல் செய்யும் காலத்திற்கான வரம்பை நிர்ணயிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. எந்த நிதியாண்டிலும் மார்ச் 15ம்தேதிக்கு பின்னர், மதிப்பீடு/ மறுமதிப்பீடு போன்றவற்றுக்கு சட்டத்தின் 148வது பிரிவின் கீழ், நோட்டீஸ் வழங்க கூடுதலாக 15 நாட்கள் அவகாசத்துக்கு அனுமதி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அனுமதி வழங்குவதற்கான குறிப்பிடத்தக்க அதிகாரியாக முதன்மை தலைமை ஆணையர் அல்லது முதன்மை தலைமை இயக்குநர் அல்லது தலைமை ஆணையர் அல்லது தலைமை இயக்குநர் இருப்பார்.

இ-10

கணக்குத்தாரர் தாக்கல் செய்த தவறான தகவல் அல்லது குறைபாடு உள்ள தகவல் குறித்து அறிக்கை வழங்கும் நிதி நிறுவனம், தாக்கல் செய்யும் நிதி பரிவர்த்தனை அறிக்கையில் ஏதேனும் குறைபாடுகள் இருக்குமானால் ரூ. 5 ஆயிரம் அபராதம் விதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இ-11

வரி பிடித்தம்தொடர்பான பரிவர்த்தனைகளில் குறைபாடு இருக்கும்பட்சத்தில் அபராதம் மற்றும் தண்டனை வழங்க வகை செய்யும் சட்டத்தின் 271 சி, 276 பி ஆகிய பிரிவுகளில் திருத்தம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

.இ-12

பினாமி சட்டத்தின் கீழ், நிதி ஆணையத்தின் உத்தரவுக்கு எதிராக மேல் முறையீடு செய்யும் காலத்தை, உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து 45 நாட்களுக்குள் நிர்ணயிக்கும் வகையில், திருத்தம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எஃப் சீரமைப்பு

எஃப்-1

வங்கி மற்றும் காப்பீட்டு தொழிலுக்கு பொருந்தாத வெளிநாட்டுடன் தொடர்புடைய நிறுவனத்தின் வட்டி செலுத்துதலுக்கு கட்டுபாடு விதிக்கப்படும். வங்கி சாராத நிதி நிறுவனங்களுக்கு இந்த பயனை நீட்டிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எஃப்-2

சில வகை வருமானம் பெறும் வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு தற்போது 20 சதவீத விகிதத்தில் வரி பிடித்தம் செய்யப்படுகிறது. ஆனால், ஒப்பந்தங்களுக்கான வரி வகிதம் குறைவாக இருக்கக்கூடும். வரி ஒப்பந்த பயனை இந்த பிரிவினருக்கு வழங்க சட்டத்தின் 196வது ஏ பிரிவின் கீழ், அனுமதிக்கப்படும்.

எஃப்-3

பான் கணக்கு இல்லாதவர்களுக்கு ஊழியர்கள் வருங்கால வைப்பு நிதி திட்டத்தில் இருந்து எடுக்கப்படும் தொகைக்கு 30 சதவீத அளவில் தற்போது வரி பிடித்தம் செய்யப்படுகிறது. இதனை 20 சதவீதமாக குறைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எஃப்-4

சில சமயங்களில் வருமானத்திற்கான வரி முன்னதாக கழிக்கப்படும். அத்தகைய வரி செலுத்துவோருக்கு பயனளிக்கும் வகையில் சட்டத்தில் திருத்தம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எஃப்-5

முந்தைய ஆண்டுகளில் வருமான கணக்கு தாக்கல் செய்யாதவர்களுக்கு உயர் வரி பிடித்தம் வரம்பு ரூ. 50 ஆயிரமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டுகளில் கணக்கு தாக்கல் செய்யவேண்டிய தேவையில்லாத நபர்களை இதிலிருந்து விடுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு அந்த நபர் மத்திய அரசின் அதிகாரபூர்வ அரசிதழில் தகவல் தெரிவிக்க வேண்டும்.

எ.ஃப்-6

செலுத்தப்பட்ட அட்வான்ஸ் வரி தொகைக்கு 234 பி பிரிவின் படி வட்டி விதிப்பதை குறைக்கும் நடவடிக்கை குறித்து தெளிவுப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எ.ஃப்-7

வெளிநாடு வாழ் இந்தியர்கள் உட்பட அனைத்து முதலீட்டாளர்களுக்கு பங்குகளில் முகமதிப்புக்கு கூடுதலாக வரி விதிப்பை நீட்டிப்பது குறித்து பரிசீலிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எ.ஃப்-8

ஊழியர்களுக்கு தங்கும் இடவசதி அளிக்கும் உரிமையாளர்களின் மேல் வருமானத்திற்கு சீரான வரி விதிப்பை வரவேற்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எ.ஃப்-9

சிறப்பு பொருளாதார மண்டல தொழில் நிறுவனம் சரக்குகளை ஏற்றுமதி செய்யவோ, அல்லது சேவைகளை இந்தியாவுக்கு கொண்டுவரவோ கால வரம்பு நிர்ணயிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஏற்றுமதி வருமானம் மீதான தள்ளுபடியை கோருவது கட்டயாமாக்கப்படுவதுடன், வருமான வரி கணக்குதாக்கல் செய்யவதும் கட்டாயமாக்கப்படுகிறது.

எ.ஃப்-10

வங்கி சாரா நிதிநிறுவனங்களை வகைப்படுத்துவதில் ரிசர்வ் வங்கி மேற்கொண்டுள்ள மாற்றங்களை சட்டத்தில் தேவையான திருத்தங்களை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எ.ஃப்-11

சட்டத்தின் 28வது பிரிவின் கீழ் வரிவிதிப்பு, 194 ஆர் பிரிவின் கீழ் வரி பிடித்தம் ஆகியவை பற்றிய விளக்கம் அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. பயன்கள் ரொக்கமாக இருப்பதற்கு வகை செய்யப்படும்.

எ.ஃப்-12

சலுகைகள் தொடர்பாக, திருத்தங்களை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தொண்டு நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகளுக்கு வழங்கப்படுகிறது

- வரி மற்றும் கடன் வழங்குதல், திருப்பி செலுத்துதல் ஆகியவற்றில் தெளிவை ஏற்படுத்துகிறது.
- மற்றொரு அறக்கட்டளைக்கு அளிக்கப்படும் நன்கொடைக்கு 80சதவீதம் மட்டுமே அளிக்கப்படும்
- விண்ணப்பம்,தேவையற்ற விதிகளை தவிர்க்கவும், தற்காலிக மற்றும் வழக்கமான பதிவுகளை இணைக்கவும் விலக்கு அளிக்கப்படும்
- குறிப்பிட்ட நோக்கங்களை மாற்றியமைத்தல்
- ஒரு அறக்கட்டளை தற்காலிக விலக்கு பெற்ற பிறகு அந்தவிலக்கு காலாவதியான பிறகும் விலக்கு பெற விண்ணப்பிக்கவில்லை என்றால் சொத்துக்களுக்கு வரி செலுத்தவேண்டும்.
- சில வடிவங்களை வழங்குவதற்கான கால அளவு சீரமைக்கப்படும்.
- விலக்கு கோருவதற்கான வருமானத்தை சமர்ப்பிப்பதற்கு வழங்கப்பட்ட நேரம், வரி செலுத்துவதற்கு வழங்கப்பட்ட நேரத்தோடு, சேர்த்துக்கொள்ளப்பட மாட்டாது.
- F.13 80ஜி பிரிவிலிருந்து பெயர் அடிப்படையிலான சில பிரிவுகளை தவிர்க்க முன்மொழியப்பட்டுள்ளது. நன்கொடை வழங்குபவர்களின் வருமானத்தில் இருந்து அந்த நன்கொடையை கழிக்க வகை செய்யப்பட்டுள்ளது.
- F.14 ஒரு நபருக்கு திருப்பி செலுத்தவேண்டிய தொகை மதிப்பீடு அல்லது மறு மதிப்பீட்டுக்கான நடவடிக்கைகள் நிலுவையில் இருந்தால், அவர்களுக்கான திருப்புதல் தொகை நிறுத்தி வைக்கப்படும்.

பிற....

G.1 பிரிவு 88 மற்றும் 10வது பிரிவின் சில உட்பிரிவுகளில் நடைமுறையில் இல்லாதவற்றை தவிர்க்க முன்மொழியப்பட்டுள்ளது.

G.2 செப்டம்பர் 20 2023 வரை யூனிட் ட்ரஸ்ட் ஆப் இந்தியாவின் குறிப்பிட்ட நிறுவனத்திற்கு வரி விலக்கு நீட்டிக்க திட்டமிடப்பட்டுள்ளது. யூனிட் ட்ரஸ்ட் இந்தியாவின் நிர்வாக அலுவலகத்தின் விடுமுறை தேதியை அரசு அறிவிப்பதற்கும் முன்மொழியப்பட்டுள்ளது.

G.3 ஏப்ரல் 1 2023 முதல் நடைமுறைக்கு வரும் வகையில், 276 ஏ பிரிவின் கீழ் சில செயல்கள் தவறில்லை என்று முன்மொழியப்பட்டுள்ளது.

A சுங்கச்சட்டங்களில் சட்டம் மாற்றுதல்

A-1 சுங்கச் சட்டத்திருத்தங்கள் 1962

பல அல்லது இருதரப்பு வர்த்தக உடன்படிக்கைகள் தொடர்பாக வெளியிடப்படும், அறிவிப்புகள் இரண்டு ஆண்டு காலம் செல்லுபடியாகும் என்ற நிபந்தனைக்குட்பட்ட சுங்கவரி விலக்குகளின் சில வகைகளை விலக்க, பிரிவு 25(4-A) திருத்தப்படுகிறது. சர்வதேச உடன்படிக்கைகள் யுஎன் முகவர்கள், சர்வதேச அமைப்புகள் உட்பட அரசமைப்பு அதிகாரிகளின் சலுகைகள், வெளிநாட்டு வர்த்தக கொள்கையின் கீழ் உள்ள திட்டங்கள் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் செயல்படும் மத்திய அரசின் திட்டங்கள், தற்காலிக இறக்குமதி, மறு இறக்குமதி, பரிசு அல்லது தனிப்பட்ட பொருட்கள் இறக்குமதி பிற இறக்குமதி சுங்கக்கட்டணம் 1975 பிரிவு-3 (7)ன் கீழ் விதிக்கப்பட்ட சுங்கவரியை தவிர, 1962 சுங்கச் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டது.

A-2 விதிகளின் நோக்கத்தை தெளிவுப்படுத்துவதற்காக சுங்கக்கட்டணத்தின் பிரிவுகள் 9 A, 9 C ஆகியவற்றின் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. ஜனவரி 1 , 1995 முதல் சரிபார்க்கப்படுகின்றன.

A-3 சுங்கக் கட்டணச் சட்டம் 1975, முதல் அட்டவணையில் திருத்தங்கள் செய்யப்படுகிறது. 02.02.2023 முதல் சில பொருட்களின் விகிதங்களை அதிகரிக்கவும், மேலும் சில பொருட்களுக்கான கட்டணங்களின் விகிதங்களை மாற்றவும் திருத்தம் செய்யப்படுகிறது. ஒப்புதல் தேதியிலிருந்து இவை நடைமுறைக்கு வரும்.
சுங்கக்கட்டணச் சட்டத்தின் முதல் அட்டவணை HSN 2022 திருத்தங்களின் படி, திருத்த முன்மொழியப்படுகிறது.
தினை சார்ந்த பொருட்கள், பாலாடை கட்டி, மருத்துவ தாவரங்கள் மற்றும் அதன் பகுதிகள் சில பூச்சிக்கொல்லி மருந்துகள், செயற்கை வைரம், பருத்தி, உரத்திற்கான யூரியா, தொலைத்தொடர்பு பொருட்கள் போன்றவற்றுக்கு புதிய கட்டணங்கள் உருவாக்கப்பட உள்ளன. பல்வேறு அறிவிப்புகள் மூலம் இறக்குமதி சலுகைகளை பெறலாம்.

இது வர்த்தகத்தை எளிதாக்கவும், கால விரயத்தை தடுக்கவும் உதவும். இந்த மாற்றங்கள் 1.05.2023 முதல் அமலுக்கு வருகின்றன.

A-4 தலைப்பு 1202ன் கீழ் உள்ளீடுகளை முதல் அட்டவணையுடன் (இறக்குமதி கட்டணம்) சீரமைக்க இரண்டாவது அட்டவணை (ஏற்றுமதி கட்டணம்) திருத்தப்படுகிறது.

B ஜிஎஸ்டி சட்டங்களில் திருத்தங்கள்:

B1 குற்றவியல் நீக்கம்:
CGST சட்டத்தின் பிரிவு 132 மற்றும் 138 திருத்தப்படுகிறது.
சரக்கு மற்றும் சேவைகள் அல்லது இரண்டும் வழங்கப்படாமல் விலை பட்டியலை வழங்கிய குற்றத்தை தவிர, ஜிஎஸ்டியின் கீழ் வழக்கு தொடர வரி தொகை ஒரு கோடியிலிருந்து 2 கோடியாக உயர்த்தப்படுகிறது. தற்போதையை வரம்பிலிருந்து 50 சதவீதத்திலிருந்து 50 முதல் 150 சதவீதம் வரை வரித்தொகை 25 முதல் 100 சதவீதமாக உயர்த்தப்படுகிறது.
பிரிவு (G) (J) குறிப்பிட்ட சில குற்றங்களை குற்றமற்றதாகிவிட்டது. பிரிவு (K)CGST சட்டம் 2017ல் பிரிவு 132ல் உட்பிரிவு ஒன்று. அதாவது, எந்தவொரு அதிகாரியையும் பணி செய்யவிடாமல் தடுத்தல், பொருள் ஆதாரங்களை வேண்டும்மென்றே தூண்டுதல், தகவல்களை தர தவறுதல் போன்ற குற்றங்கள் விலக்கப்பட்டிருக்கின்றன.

B2 CGST சட்டத்தின் பிரிவு மற்றும் பிரிவு 122 ஆகியவற்றில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. பதிவு செய்யப்படாத விற்பனையாளர்கள் மற்றும் வரி செலுத்துவோர் மாநிலங்களுக்குள் இ-வணிக செயல்பாடுகள் மூலம் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு பொருட்களை எடுத்துச்செல்ல முடியும்.

B3 2017 CGST சட்டம் அட்டவணை 3ல் திருத்தங்கள்:
பத்தி எண் 7, 8, 8பி அட்டவணை 3ல் புதிய திருத்தங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இவை 01.02. 2019 முதல் செயலுக்கு வரும். சில பரிவர்த்தனைகள், செயல்பாடுகள், பொருட்கள் வழங்குதல், ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு பொருட்களை அனுப்புதல், வரி விதிக்கக்கூடிய பிரதேசத்திற்கு வெளியே அனுப்புதல் ஆகியவற்றில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வரி விதிப்பு தொடர்பான குழப்பங்களையும், சந்தேகங்களையும் நிவர்த்திக்க 01.07.2017 முதல் மேற்கூறிய திருத்தங்கள் நடைமுறைக்கு வரும். எவ்வாறாயினும் ஏதேனும் ஏற்கனவே செலுத்தப்பட்ட வரி இருக்கும் பட்சத்தில் அவை திருப்பித்தரப்பட மாட்டாது. 01.07.2017 முதல் 31.01.2019 வரையிலான காலகட்டத்தில் பரிவர்த்தனைகள், நடவடிக்கைகள் இதில் அடங்கும்

B4 ஜிஎஸ்டி வரிதாக்கல்
(CGST சட்டம் 2017-ன் பிரிவுகள் 37, 39, 44 மற்றும் 52 ஆகியவை திருத்தப்படுகின்றன. அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டிய தேதியிலிருந்து அதிகபட்சமாக 3 ஆண்டுகளுக்கு அறிக்கைகளை தாக்கல் செய்வதை கட்டுப்படுத்தும் வகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

B5 CGST சட்டத்தின் CSR பிரிவு 17-ன் (5) தொடர்பான செலவீனங்களுக்கான உள்ளீட்டு வரி, கடன், பொருட்கள் அல்லது சேவைகள் வரி விதிக்கக் கூடிய நபரால் பெறப்பட்ட கடன் திரும்ப பெற இயலாது. நிறுவனங்கள் சட்டம் 2013-ன் பிரிவு 135-ல் குறிப்பிடப்பட்டுள்ள பெரு நிறுவன சமூக பொறுப்பின் கீழ் அவர்களது கடமைகள் தொடர்பான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும் வகையில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

B6 தகவல் பகிர்வு
CGST சட்டத்தின் ஒரு புதிய பிரிவு 158ஏ, பதிவு செய்யப்பட்ட நபர் அதனை திரும்ப பெறும்போது பதிவு செய்த விண்ணப்பம், அவற்றின் அறிக்கை அல்லது மின்னணு பட்டியல் தயாரிப்பதற்காக பதிவேற்றிய விவரங்களை பகிர்ந்து கொள்ளும் வகையில் விவரங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

B7 IGST சட்டம் 2017-ன் பிரிவு 2 உட்பிரிவு 16-ல் உள்ள திருத்தங்கள்
IGST சட்டத்தின் பிரிவு 2 (16) வரிவிதிக்கப்படாத ஆன்லைன் பெறுநர் என்பதன் வரையறையை திருத்தியமைக்க ஆன்லைன் தகவல் மற்றும் தரவு தளத்தை அணுகும் நிபந்தனையை நீக்கி வணிகம், தொழில் தவிர வேறு நோக்கங்களுக்காக மீட்டெடுக்கும் சேவைகள் வரிவிதிக்கப்படாத பகுதிகளில் உள்ள எந்தவொரு நபரால் வழங்கப்படும் தகவல்களும் சேவையின் வரிவிதிப்பை பெறும். வரிவிதிக்கக் கூடிய பகுதியில் உள்ள நபருக்கு IGST சட்டத்தின் பிரிவு

24 உட்பிரிவு (6) அடிப்படையில் மட்டுமே பதிவு செய்யப்பட்ட நபர்கள் செயல்பட முடியும். இல்லாத பட்சத்தில் பதிவு செய்யாதவர்களாக கருதப்படுவார்கள்.

B8 ஆன்லைன் தகவல் மற்றும் தரவு தள அணுகல் அல்லது மீட்பு
IGST சேவைகள் சட்டத்தின் பிரிவு 2-ன் (17) ஆன்லைன் தகவல் மற்றும் தரவு தள அணுகல் அல்லது மீட்பு சேவைகள் என்பதன் வரையறையை திருத்தியமைக்க தானியங்கி முறை அடிப்படை வழங்கப்படுவதை நீக்கி திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது குறைந்தபட்ச மனித தலையீட்டை உள்ளடக்கியது.

B9 சில சந்தர்ப்பங்களில் வழங்கல் முறைகள்
IGST சட்டத்தின் பிரிவு 12-ன் துணை பிரிவு (8) விதிமுறை தவிர்க்கப்படுகிறது. இதனால் சேவைகள் வழங்குபவர் மற்றும் பெறுநரின் தொடர்புகளில் சரக்குகள் சென்றடையும் இலக்கை பொருட்படுத்தாமல் இந்தியாவின் எந்தப் பகுதியிலும் விநியோக இடத்தை குறிப்பிட முடியும்.

C சுங்கத்தீர்வை மாற்றங்கள்

C-1 உள்ளீட்டு செலவை குறைக்கவும், மதிப்புக்கூட்டுதலை அதிகரிக்கவும், ஏற்றுமதி போட்டித்தன்மையை அதிகரிக்கவும், மாற்று வரி கட்டமைப்பை சரிசெய்யவும், உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கவும் அடிப்படை சுங்கத்தீர்வை குறைக்கப்பட்டுள்ளது.

| வ. எ | பொருட்கள் | சதவீதத்திலிருந்து | சதவீதமாக |
|---|---|---|---|
| 1 | **வேளாண்பொருட்கள் கொட்டைகள் (pecen)** | 100 | 30 |
| 2 | **நீர்வாழ் உற்பத்திக்கான மீன்களுக்கான உணவு** | 15 | 5 |
| 3 | **நீர்வாழ் உயிரினங்களுக்கான தீவனம்** | 15 | 5 |
| 4 | **நீர்வாழ் உயிரினங்களுக்கு** | 32 | 15 |

| | | | |
|---|---|---|---|
| | தீவனம் தயாரிப்பதற்கான மீன்கொழுப்பு | | |
| 5 | நீர்வாழ் தீவனம் தயாரிப்பதற்கான பாசி (மாவு) | 30 | 15 |
| 6 | நீர்வார் தீவனம் தயாரிப்பதற்கான வைட்டமின் கலவை | 15 | 5 |
| 7 | குளோரோ ஹைட்ரின் தயாரிப்பதற்கான கச்சா கிளிசரின் | 7.5 | 2.5 |
| 8 | தொழிற்சாலை ரசாயனங்கள் உற்பத்திக்கான எத்தையல் ஆல்ஹகால் | 5 | NIL |
| II | கனிமங்கள் | | |
| | | | |
| 1 | அமிலத்தர பிளோரோஸ்பர் (97 சதவீதத்திற்கும் அதிகமான கால்சியம் புளோரைடு கொண்டது) | 5 | 2.5 |
| III | கற்கள் மற்றும் நகைத்துறை | | |
| 1 | ஆய்வகத்தில் உருவாக்கப்பட்ட வைரம் தயாரிப்பதில் பயன்படுத்தப்பட்ட மூலப்பொருள் | 5 | NIL |
| | | | |
| IV | மூலதனப் பொருட்கள் | | |
| 1 | மின்சாரத்தில் | AS APPLICABLE | NIL (UP TO |

| | | | |
|---|---|---|---|
| | இயங்கும் வாகனங்களுக்கான லித்தியம் பேட்டரி தயாரிப்பதற்கான மூலப்பொருட்கள் /இயந்திரங்கள் | | 31.03.2024) |
| V | தொழில்நுட்பம் மற்றும் மின்னணு பொருட்கள் | | |
| 1 | PRE CALCINED FERRITE POWDER தயாரிப்பதற்கான ரசாயனங்கள் | 7.5 | NIL Up to 31.03.2024) |
| 2 | இணைப்பான்கள் தயாரிப்பதற்கான பலேடியம் டெட்ரா அமீன் சல்பேட் | 7.5 | NIL (UP TO 31.03.2024) |
| 3 | அலைப்பேசிக்கான கேமரா தயாரிப்புக்கான பயன்படும் லென்ஸ் அதன் பாகங்கள் | 2.5 | NIL |
| 4 | தொலைக்காட்சிக்கான உதிரி பாகங்கள் | 5 | 2.5 |
| VI | மின்னணு சாதனங்கள் | | |
| 1 | மின்சார சமையலறை, புகைப்போக்கிகள் தயாரிப்புக்கான உதிரி பாகம் (heat coil) | 20 | 15 |
| VII | மற்றவை | | |
| 1 | விளையாட்டு வீரர்களுக்கான இறக்குமதி செய்யப்பட்ட ஊட்டச்சத்து பொருட்கள் (பயிற்சி நோக்கங்களுக்காக) | 30 | NIL |

| | | | |
|---|---|---|---|
| 2 | **வாகனங்கள் மற்றும் ஆட்டோ மொபைல் துறையில் சோதனை முகமைகளால் அறிவிக்கப்பட்ட இறக்குமதி செய்யப்படும் பாகங்கள/ துணை அமைப்புகள், டயர்கள்** | **As Applicable** | **NIL** |

C2 சுங்க வரி அதிகரிப்பு 02.02.2023 முதல்

| **வ. எ** | **பொருட்கள்** | **சுங்க வரி விகிதம்** | |
|---|---|---|---|
| | | **சதவீதத்திலிருந்து** | **சதவீதமாக** |
| **I** | **ரசாயனங்கள்** | | |
| **1** | **ஸ்டைரைன்** | **2**<br>**(+0.2 sws)** | **2.5**<br>**(+0.25 sws)** |
| **2** | **வினைல் குளோரைடு மோனோமெர்** | **2**<br>**(+0.2 sws)** | **2.5**<br>**(+0.25 sws)** |
| **II** | **பெட்ரோ கெமிக்கல்** | | |
| **1** | **நாப்தா** | **1**<br>**(+0.1 sws)** | **2.5**<br>**(+0.25 sws)** |
| **III** | **மதிப்புமிக்க உலோகங்கள்** | | |
| **1** | **வெள்ளி (தங்கம் அல்லது பிளாட்டினம் பூசப்பட்ட வெள்ளி உட்பட), தூளாக அல்லது பொருளாக மாறுவதற்கு முன்** | **7.5**<br>**(+2.5 AIDC+ O.75 sws)** | **10**<br>**(+5 AIDC+ NIL sws)** |
| **2** | **பார் வெள்ளி** | **6.1 (+2.5 AIDC+ O.61 sws)** | **10**<br>**(+4.35 AIDC+ Nil sws)** |

| | | | |
|---|---|---|---|
| IV | கற்கள் மற்றும் நகைப்பிரிவு | | |
| 1 | தங்கம், வெள்ளி, பிளாட்டினம் போன்ற உலோகங்கள் | 20 (+Nil AIDC +2 SWS) | 25 (+Nil AIDC +Nil SWS) |
| 2 | போலி நகைகள் | 20 or ` 400/kg., whichever is higher<br><br>(+Nil AIDC +2 or ` 40 per Kg SWS) | 25 or ` 600/kg., whichever is higher<br><br>(+Nil AIDC +Nil SWS) |
| V | வாகனங்கள் | | |
| 1 | வாகனங்கள் ( மின்னணு வாகனங்கள்) | 30<br>(+3 SWS) | 35 (+Nil SWS) |
| 2 | CBU வாகனங்கள் 40 ஆயிரம்USD-க்கு மேற்பட்டவை பெட்ரோலில் இயங்கும் 3000 cc வாகனங்கள் 2500 ccக்கு மேற்பட்ட வாகனங்கள் டீசல் வாகனங்கள் | 60<br>(+6 SWS) | 70 (+Nil SWS) |
| 3 | 40 ஆயிரம் usdக்கு மேற்பட்ட முற்றிலும் மின்சாரத்தில் இயங்கும் வாகனங்கள் | 60<br>(+ 6 SWS) | 70 (+Nil SWS) |
| VI | மற்றவை | | |
| 1 | மிதிவண்டிகள் | 30<br><br>(+ Nil AIDC +3 SWS) | 35<br><br>(+ Nil AIDC +Nil SWS) |
| 2 | பொம்மைகள் மற்றும் பொம்மைகளின் பாகங்கள், | 60<br><br>(+Nil AIDC+ 6 SWS) | 70<br><br>(+Nil AIDC+ Nil SWS) |
| 3 | கூட்டு ரப்பர் | 10 | 25 or ` 30/kg., whichever is lower |

| | | | |
|---|---|---|---|
| **4** | **சமையலறை மின் புகைபோக்கி** | 7.5 | 15 |

D. கலால் வரியில் மாற்றங்கள்

D1. சிகரெட்கள் மீதான என்சிசிடி வரி வகிதம் (2.2.2023 முதல் அமலுக்கு வருகிறது)

| பொருள்களின் விளக்கம் | கலால் வரி விகிதம்(1000 எண்ணிக்கைக்கு ரூபாயில் இருந்து) | கலால் வரி விகிதம்(1000 எண்ணிக்கைக்கு ரூபாயாக) |
|---|---|---|
| 65 மில்லி மீட்டருக்கு குறைவான வடிகட்டியில்லாத சிகரெட் | 200 | 230 |
| வடிகட்டியுடனான சிகரெட் 65 முதல் 70 மில்லி மீட்டர் அளவில் | 250 | 290 |
| வடிகட்டியுடனான சிகரெட் 65 மில்லி மீட்டருக்கும் மிகாமல் | 440 | 510 |
| 70 மில்லி மீட்டர் நீளத்திற்கு உட்பட்ட வடிகட்டியுடனான சிகரெட் | 440 | 510 |
| 70-75 மில்லி மீட்டர் நீளத்திற்கு உட்பட்ட வடிகட்டியுடனான | 545 | 630 |

| | | |
|---|---|---|
| சிகரெட் | | |
| மற்ற சிகரெட்கள் | 735 | 850 |
| புகையிலையிக்கு மாற்றான சிகரெட் | 600 | 690 |

D2 மத்திய கலால் வரியில் மற்ற மாற்றங்கள். 2.2.2023 முதல் அமலுக்கு வரும். பசுமை எரிப்பொருளை ஊக்குவிப்பதற்காக பயோ கேஸ் மீதுப செலுத்தப்படும் ஜிஎஸ்டிக்கு மாற்றாக இயற்கை எரிவாயுக்கு மத்திய கலால் வரி விலக்கு அளிக்கப்படுகிறது.

E மற்றவைகள் சிறிய இயல்புடைய வேறு சில மாற்றங்களும் செய்யப்பட்டுள்ளன. பட்ஜெட் முன்மொழிவுகளின் விவரங்களுக்கு விளக்க குறிப்பேடு மற்றும் பிற தொடர்புடைய பட்ஜெட் ஆவணங்கள் குறிப்பிடப்படலாம்.